# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2016
ரூ.10.00



# மாற்றா... ஏமாற்றா?

# மோடியின் திறன்மிகு இந்தியா:
# இன்னுமொரு மோசடி!

**சென்னையிலுள்ள ஐ.சி.எஃப். தொழிற்சாலையில் ரயில் பெட்டிகளை உருவாக்கப் பயிற்சி பெற்ற 5,000 பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதால், அவர்கள் இளநீர் வியாபாரிகளாக, சமையல் வேலை எடுபிடிகளாக வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.**

"இப்பொழுதாவது எங்களுக்கு வேலை தருவீங்களாடா?" - தீக்குளித்த உடல் வேதனையையும் மீறி, தனது இறுதி மூச்சு அடங்கும் வரையிலும் ஹேமந்த்குமார் இந்தக் கோரிக்கையை எழுப்பிக் கொண்டேயிருந்தார். அவர் தனக்காக மட்டும் இந்தக் கோரிக்கையை எழுப்பவில்லை. சென்னை ரயில் பெட்டித் தொழிற்சாலையில் (ஐ.சி.எஃப்.) தன்னைப் போல தொழிற்பயிற்சி முடித்த 5,000 பேருக்காக, கடந்த டிசம்பர் மாதம் அத்தொழிற்சாலை வாசலிலேயே தன்னைத் தீயிட்டுக் கொளுத்திக் கொண்டு மாண்டு போனார், அவர்.

ஹேமந்த்குமார் உள்ளிட்டு இந்த 5,000 பேரும் "ஆக்ட் அப்ரண்டிஸ்" பயிற்சியை முடித்துவிட்டு, 17 ஆண்டுகளாக ஐ.சி.எஃப். வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். "ஐ.சி.எஃப்.இல் தொழிற்பயிற்சி பெற்ற எங்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் நிரந்தர வேலை வழங்கு!" - என்பதுதான் அவர்களின் கோரிக்கை. இக்கோரிக்கையை முன்வைத்து பல்வேறு போராட்டங்களை நடத்திவருகிறது ஆக்ட் அப்ரண்டிஸ் மாணவர்கள் அமைப்பு. அதனின் போராட்டங்களைத் தாண்டி, இரயில் முன் பாய்ந்து உயிரை மாய்த்துக்கொண்ட சதீஷ், தூக்குமாட்டிக் கொண்ட மோகன், தீக்குளித்த ஹேமந்த்குமார் என இதுவரை 27 பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் ஐ.சி.எஃப். நிர்வாகம் இம்மியளவும் அசைந்து கொடுக்க மறுக்கிறது.

இந்தியாவில் திறன் மிகுந்த தொழிலாளர்கள் குறைவாக இருப்பது போலவும், அப்படியானவர்களை உருவாக்கி, அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவதற்காகவே திறன்மிகு இந்தியா (Skill India) என்ற திட்டத்தை உருவாக்கியிருப்பதாகத் தம்பட்டம் அடித்துவருகிறார், மோடி. இதோ ரயில் பெட்டி செய்வதைக் கற்றுத் தேர்ந்த 5,000 பேர் வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை தர மறுக்கிறது, மைய அரசின் ரயில்வே துறை. இதனால் ரயில் பெட்டி செய்வதைக் கற்றுத் தேர்ந்த அந்த தொழிலாளர்கள் இளநீர் வியாபாரம் செய்கிறார்கள், நம்பர் பிளேட் ஒட்டுகிறார்கள், சமையல் வேலைக்கு ஓடுகிறார்கள்.

ஆசியாவின் மிகப்பெரிய ரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை ஐ.சி.எஃப்.-இல் ஏறத்தாழ 10,000 நிரந்தரத் தொழிலாளர்களும் 3000-க்கும் மேற்பட்ட ஒப்பந்தப் பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். இதற்கு அப்பால், ஆண்டுதோறும் தொழிற்பழகுநர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் 500 மாணவர்களும் அத்தொழிற்சாலையில் பணியாற்றுகின்றனர்.

தீக்குளித்து மாண்டுபோன ஹேமந்தக்குமார்.



டிப்ளமோ மற்றும் பொறியியல் பட்டப் படிப்பு முடித்துவிட்டு தொழிற்பழகுனர்களாக சேருபவர்களை "டிரேடு அப்ரண்டிஸ்" என்றும்; பத்தாம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு மற்றும் ஐ.டி.ஐ. முடித்துவிட்டு சேரும் மாணவர்களை "ஆக்ட் அப்ரண்டிஸ்" என்றும் வகைப்படுத்தி, இவர்களின் கல்வித்தகுதி மற்றும் தேர்ந்தெடுத்துள்ள துறையைப் பொருத்து ஓராண்டு முதல் மூன்றாண்டுகள் வரையில் தொழிற்பழகுநர் காலத்தை வரையறுத்திருக்கிறது, ஐ.சி.எஃப். நிர்வாகம். இதன் மூலம் 500 பேரின் உழைப்பு சக்தியை மிகவும் குறைந்த கூலிக்குப் பயன்படுத்தி வருகிறது, ஐ.சி.எஃப்.

இவ்வாறு பயிற்சி முடித்து வெளியேறும் மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சி பெற்றமைக்கான சான்று வழங்குவதோடு, வேலைவாய்ப்பில் இவர்களுக்கு முன்னுரிமையும் அளித்து வந்தது, ஐ.சி.எஃப். தொழிற்பயிற்சி முடித்தவர்களுக்கு அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளுக்குள் வேலை கிடைத்துவிடும் என்ற நிலை 1998-ஆம் ஆண்டு வரையில் இருந்து வந்தது. அதன் பிறகு, ஆக்ட் அப்ரண்டிஸ் முடித்தவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதை அடியோடு தலைமுழுகிவிட்டது, ஐ.சி.எஃப். "ஆக்ட் அப்ரண்டிஸ்களை வேலைக்கு எடுக்கக்கூடாதென நீதிமன்றம் தடைவிதித்திருக்கிறது. கோர்ட்ல கேஸ் இருக்கிறது. எங்களால் ஒன்றும் செய்யமுடியாது" எனக் கூறி வரும் ஐ.சி.எஃப். நிர்வாகம், இன்னொருபுறம் ஆக்ட் அப்ரண்டிஸ் பயிற்சிக்கு மாணவர்களைத் தேர்வு செய்வதை மட்டும் நிறுத்தவேயில்லை.

"ஐ.சி.எஃப். கூறும் காரணம் கடைந்தெடுத்த மோசடி" என்கிறார், ஆக்ட் அப்ரண்டிஸ் மாணவர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜீவா. "நீதிமன்றத்தில் உள்ள வழக்கு தென்னக

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# மாற்றா... ஏமாற்றா?

அன்புமணி ராமதாசு போன்று அறிவிக்கப்பட்ட முதல்வர் வேட்பாளர், விஜயகாந்த் போன்று அறிவிக்கப்படாவிட்டாலும் ஆசைப்படும் முதல்வர் வேட்பாளர் என்று பலரும் தமிழ்நாட்டின் தேர்தல் களத்தில் முளைத் திருக்கிறார்கள். அது அவர்களின் ஜனநாயக உரிமை என்று ஒதுக்கித்தள்ள முடியாது. இப்படிச் செய்வது சொல்லிக்கொள்ளப்படும் ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கி, சீரழிந்து போனதைக் குறிக்கிறது. பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது கட்சி வேட்பாளர்களுக்குப் பொதுத் தேர்தல்களில் மக்கள் வாக்களித்துத் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மட்டுமல்ல; நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பங்கேற்கும் ஒவ்வொரு கட்சியும் உட்கட்சி ஜனநாயகத்தை அதன் இயங்கும் முறையாகக் கொண்டிருக்கவேண்டும். ஒவ்வொரு கட்சியும் அதன் கொள்கை-கோட்பாடுகளையும், நடைமுறை உத்திகளையும், கட்சி மற்றும் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்களையும் உட்கட்சி விவாதங்கள், தேர்தல்கள் மூலம் முடிவு செய்யவேண்டும்; அதுதான் ஜனநாயகம். ஆனால், இப்போது நடப்பதெல்லாம் அதற்கு மாறானதாகவும் எதிரானதாவும் உள்ளன. கட்சி செயல்பாடு என்பது தனிநபர் அல்லது சிறு கும்பல் தலைமையிலான வன்முறையாகவும் சர்வாதிகாரமாகவும் அவர்களின் பணம்-பதவி ஆதிக்கமாகவும் இருக்கிறது. இந்த வகையிலான தலைமைகளும் எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா போன்ற ஏதாவது தனியான உறவு, கருணாநிதி-ஸ்டாலின், மூப்பனார்-ஜி.கே.வாசன் போன்ற குடும்ப வாரிசுகள், ராமதாசு-அன்புமணி போன்ற சாதிய ஆதரவு, விஜயகாந்த் போன்ற அரசியலுக்கு அப்பாற்பட்டு சினிமா பிரபலம் முதலானவை அடிப்படையில் கட்டமைக்கப்பட்டவை.

இவ்வாறு கட்டமைக்கப்படும் தலைமை முன்பு கூனிக்குறுகிக் கும்பிடு போட்டு, அடி,உதை, திட்டு வாங்கி, காலில் விழுந்து, தில்லுமுல்லுகள் செய்து, தலைமை கைகாட்டும் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதும் கட்சி அணிகளின் ஜனநாயகக் கடமைகள், சமூக விழுமியங்கள், உரிமைகள் என்று சீரழிந்து போய்விட்டன. உரிமைகளைப் போராடிப் பெறுவதைவிட, தலைமையிடம் நத்திப் பிழைப்பதே மேலானது என்ற கருத்தே அவர்களிடம் ஆழமாக ஊடுருவியுள்ளது. இத்தகைய விசுவாச அடிமைகளைக் கொண்ட கும்பல்கள்தாம் பெரும்பாலும் தேர்தல் அரசியல் கட்சிகள் என்றாகி விட்டன. எந்தவொரு தேர்தல் அரசியல் கட்சியும் தனித்துப் பெரும்பான்மை பெற்று ஆட்சியைக் கைப்பற்ற முடியாத நிலையில், விசுவாச அடிமைக் கும்பல்களையும் வாக்கு வங்கிகளையும் திரட்டி வைத்திருக்கும் சிறிய கட்சிகளின் தலைமைகள் அவற்றை அடகு வைப்பதாகப் பெரிய கட்சி களிடம் பேரங்கள் நடத்தி தொகுதிகளைப் பகிர்ந்து கொள்வதும், பரிமாறிக் கொள்வதும், கூட்டணி முயற்சிகள், அதிகாரத்தில் பங்கு, ஜனநாயக உரிமை என்று பகிரங்கமாகவே பேசுகின்றன. பெரிய கட்சிகளை உருட்டி மிரட்டி பணப்பெட்டிகளும் தொகுதிகளும் பதவிகளும் பெறுகிறார்கள். பின்னர், அவற்றை அரசியலற்ற நபர்களிடம் பணத்திற்கு விற்கிறார்கள். இவ்வாறான அரசியல் சீரழிவுப் போக்குகளுக்கு நிகழ்கால வகைமாதிரியாக விஜயகாந்த் திகழ்கிறார். சினிமா ரசிகர் மன்ற நிர்வாகிகளையும், தொகுதிகளை விலைக்கு வாங்கிய வேட்பாளர்களையும் வைத்து கட்சி நடத்தும் விஜயகாந்த் பலவகையிலும் ஆம்பிளை ஜெயலலிதாதான்!

தேர்தல்கள் காலக்கிரமமாக நடத்தப்படுவதே ஜனநாயகத்தின் வெற்றி என்பதும், அவற்றில் பெரும்பான்மை பெற்று வெற்றி பெறுவதே ஜனநாயக அரசியல் தலைமையின் வெற்றி என்பதும் குறுகிய பார்வை; இப்பார்வை மேற்சொன்ன சீரழிவிற்கான முக்கிய அடிப்படையாக உள்ளது. தேர்தல் கம்யூனிஸ்டுகளும் கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என்றும், இப்போது விஜயகாந்த், வாசனுடனும் கூட்டுக்காக அலைகிறார்கள். இவர்களெல்லாம் மக்களை வழிநடத்தும் தகுதியுள்ளவர்களா? இவர்களை நம்பி இனியும் ஏமாறலாமா? •

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 31 இதழ்: 3

ஜனவரி 2016

உள்நாடு

தனி இதழ்: ரூ. 10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு : மு.துரை

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# “அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக முடியாது”

# உச்ச நீதிமன்றத்தின் மனுநீதித் தீர்ப்பு!

**இந்தத் தீர்ப்பு அர்ச்சக மாணவர்களை ஆகமக் கோயில்களில் நியமிக்கக் கூடாதெனக் கூறவில்லை. “யானையைப் பானைக்குள் அடைக்கலாம். ஆனால், பானை உடையக்கூடாது” என்கிறது. இதனை வெற்றி என்று கூறுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.**

ஆகம விதிப்படி அமைந்த கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக முடியாது என்பது உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தெளிவாகி விட்டது. 23.05.2006-இல் தி.மு.க. அரசு பிறப்பித்த அரசாணைக்கு எதிராக, மதுரை மீனாட்சி கோயிலின் பார்ப்பன அர்ச்சகர்கள் தொடுத்த வழக்கில், தற்போது உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு, பார்ப்பன ஆதிக்கத்தையும் ஆலயத் தீண்டாமையையும் பாதுகாக்கும் வகையில் மிகவும் தந்திரமான சொற்றொடர்களில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது.

“எந்த ஒரு இந்துவும் தகுதியும் பயிற்சியும் உள்ளவராயின், அவரை இந்துக் கோயிலின் அர்ச்சகராக நியமிக்கலாம்” என்ற அந்த அரசாணை அரசியல் சட்டப்பிரிவு 25 மற்றும் 26-க்கு எதிரானதென்பதால் அந்த அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்பது மதுரை மீனாட்சி கோயில் சிவாச்சாரியார்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு. இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை காரணமாகத்தான் அர்ச்சகர் பயிற்சி பெற்ற 206 மாணவர்கள் இத்தனை ஆண்டு காலமாகப் பணி நியமனம் செய்யப்படவில்லை.

தற்போதைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு மேற்படி அரசாணையை ரத்து செய்வதாக நேரடியாகக் குறிப்பிடவில்லை. இந்த மாணவர்களை ஆகம விதிப்படி அமைந்த கோயில்களில் நியமிக்கக் கூடாது என்றும் கூறவில்லை. என்ற போதிலும், அர்ச்சகர் நியமனம் என்பது ஆகம விதிகள், மரபுகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டுமென்றும், அவற்றை மீறும் உரிமை அரசுக்குக் கிடையாது என்றும் கூறுகிறது. “யானையைப் பானைக்குள் அடைக்கத் தடை இல்லை. அதே நேரத்தில் பானை உடையாமல் அடைக்க வேண்டும்” என்பதுதான் இத்தீர்ப்பு கூறும் செய்தி.

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியின் மாணவர்கள், பயிற்சிக் காலத்திலேயே பார்ப்பன அர்ச்சகர்களால் ஏளனம் செய்யப்பட்டு, அவமதிக்கப்பட்டார்கள். பயிற்சிப் பள்ளியைத் தொடங்கிய தி.மு.க. அரசும், உச்ச நீதிமன்றத்தில் வழக்கை விரைந்து முடிப்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. அ.தி.மு.க. அரசு வழக்கிலிருந்து மாணவர்களை வாபஸ் பெற வைப்பதற்குத் திரை மறைவு வேலைகளைச் செய்தது.

அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் தலைவர் ரங்கநாதன் இந்து முன்னணியினரால் தாக்கப்பட்டார். வழக்கிலிருந்து விலகிக்கொள்ளுமாறு பல முனைகளிலிருந்தும் அவருக்கு நிர்ப்பந்தங்கள் வந்தன. எல்லாவிதமான துன்பங்களையும் கடந்த எட்டு ஆண்டு காலமாக எதிர்கொண்ட பின்னர் அவருக்கும் மாணவர்களுக்கும் உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் நீதி - மனுநீதி!

இந்த அவமதிப்பு தோற்றுவித்த உள்ளக்குமுறலை வெளிப்படுத்தும் விதமாக சென்னையில் பெரியார் சிலையின் முன்னே நின்று தனது அர்ச்சகர் கோலத்தை ரங்கநாதன் களைந்தார். அரசமைப்பு சட்டத்தின் முகத்திலும் இந்து ஒற்றுமை பேசும் பார்ப்பன இந்து மதவெறியர்களின் முகத்திலும் காறி உமிழும் வகையிலான இந்த நிகழ்வை பார்ப்பன ஊடகங்கள் மட்டுமின்றி, பார்ப்பனக் கும்பலை நத்திப் பிழைக்கும் ஊடகங்களும் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்தன.

இன்னொருபுறம், இந்த தீர்ப்பு தங்களுக்கு கிடைத்த வெற்றி என்று சிவாச்சாரியார்கள், பிராமணர் சங்கம், ஆர்.எஸ்.எஸ், கும்பல், துக்ளக் முதலானோர் கொண்டாட, மறுபுறம் ஆகம வல்லுநர் சத்தியவேல் முருகனாரும், திராவிடர் கழகத் தலைவர் வீரமணி போன்றோரும் தீர்ப்பு மாணவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்று அறிக்கை விட்டுள்ளனர்.

இவர்கள் தீர்ப்பை மாணவர்களின் வெற்றி என்று கருதுவதற்கு அவர்கள் கூறும் காரணங்களைக் கீழுள்ளவாறு தொகுக்கலாம். 1.அனைத்துச் சாதி யினரையும் அர்ச்சகராக்கும் அரசாணையைத் தீர்ப்பு ரத்து செய்யவில்லை. 2.ஆகம விதிப்படி பார்ப் பனரைத்தான் நியமிக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறவில்லை. 3.மாணவர்களின் நியமனத்தை ஆட்சே பிக்கும் அர்ச்சகர்கள்தான், குறிப்பிட்ட கோயிலுக்குரிய ஆகமத்தின்படி அந்த நியமனம் தவறு என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும்.

தீர்ப்பை வெற்றி என்று கூறிக்கொள்வதற்கு இவர்கள் காட்டும் சான்றுகள் மிகவும் பலவீன மானவை. நீதிமன்றம் அரசாணையை ரத்து செய்ய வில்லை என்பது ஒரு தந்திரம். சேசம்மாள் வழக்கில் கூட, சிவாச்சாரியார்களின் மனுவைத்தான் உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இருப்பினும், நடைமுறையில் வெற்றி பெற்றவர்கள் அவர்கள்தான் என்பது நாம் அறிந்த உண்மை. எந்தவொரு நியமனத் திற்கு எதிராக கேள்வி எழுப்பப்பட்டாலும், அந்த நியமனம் மரபு மற்றும் பழக்க வழக்கத்தின் அடிப்படையில் செல்லத்தக்கதுதானா என்பது நீதி மன்றத்தால் முடிவு செய்யப்படவேண்டும் என்று தான் தீர்ப்பு கூறுகிறது. இதனை வெற்றி என்று கூறிக்கொள்வது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

இதனை வெற்றி என்று கூறிக்கொள்வோரின் கண்ணோட்டம்தான் நமது பரிசீலனைக்குரியது. இளையபெருமாள் குழு அறிக்கை, தீண்டாமை ஒழிப்பு என்ற கோணத்திலிருந்துதான் அனைத்துச் சாதி யினரையும் அர்ச்சகராக்குவது என்ற யோசனை யையே முன்வைக்கிறது. இதன் அடிப்படையில்தான் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டம் 1971-இல் பிறப்பிக்கப்பட்டது. 2006-ஆம் ஆண்டு அரசாணையின் நோக்கமும் அதுதான். அந்த நோக்கம் வெற்றி பெற்றிருக்கிறதா, தோல்வியடைந்திருக்கிறதா என்பதுதான் கேள்வி.

"குறிப்பிட்ட கோயிலில், குறிப்பிட்ட பார்ப்பன உட்பிரிவைச் சேர்ந்தவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று எந்த ஆகமத்திலும் இல்லை. நிகம (வேத) வழிபாட்டு முறைதான் சுமார்த்த பார்ப்பனர்க்கு உரியது; ஆகம முறை அல்ல. ஆதி சைவர் இலக்கணத்தில் பிறப்பு பற்றிய பேச்சுக்கே இடமில்லை" என சத்தியவேல் முருகனார் முன்வைக்கும் வாதங்கள் எல்லாம் 1971-இலேயே நமக்குத் தெரிந்தவைதான்.

"ஆகம விதிகளைச் சரியாக அமல்படுத் தினாலே பார்ப்பனரல்லாதாரை அர்ச்சகராக நியமித்து விடலாம்" என்பதுதான் இந்த வாதத்தின் உட்பொருள். அப்படியானால், அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி தொடங்குவதற்கு, ஆதித்யன் தீர்ப்பு வரும்




பார்ப்பன அர்ச்சகர்கள் பெற்ற தடையுத்தரவின் காரணமாக இழுத்து மூடப்பட்டு, பாழடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் அர்ச்சகர் பயிற்சி நிலையம்.

வரை தி.மு.க. அரசு எதற்காகக் காத்திருந்தது? ஆகமங்களின் அடிப்படையிலேயே அனைத்துச் சாதியினரையும் நியமித்துவிட முடியும் என்றால், "தகுதியான இந்து மாணவர்களை அர்ச்சகராக நியமிப்பதற்கு, மரபு மற்றும் சம்பிரதாயம் (custom and usage) ஆகியவை தடையாக இருக்க முடியாது" என்று ஒரு அவசரச் சட்டத்தை இயற்றி, அதற்குப் பின் பள்ளியை அமைக்க வேண்டிய அவசியம் என்ன? அந்தச் சட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றம் எப்படி இடைக்காலத் தடை வழங்க முடிந்தது? தீர்ப்பு நமக்கு சாதகமானது என்று கூறுவோர் இந்தக் கேள்விகளுக்கு விடை காண வேண்டும்.

"ஆகமத்தில் சாதி இல்லை" என்று சத்தியவேல் முருகனார் சொன்னால், "ஆமாம் நாங்களும் அதைத்தான் சொல்கிறோம், இது சாதிப் பாரபட்சம் அல்ல, மத சம்பிரதாயம்" என்று எதிர்த் திசையிலிருந்து அதனை எதிரொலிக்கிறார்கள் சிவாச்சாரியார்கள். எனவே ஆகமம், மரபு ஆகியவற்றின் வழியாக அர்ச்சகர் பதவியைப் பார்ப்பனரல்லாதாருக்குப் பெற்றுத்தரும் முயற்சி என்பது, பார்ப்பனியத்துக்கு மனித முகம் வழங்குவதற்கும், இந்த அரசமைப்புச் சட்டத்துக்கு ஜனநாயக முகப்பூச்சு அணிவிப்பதற்கும் மட்டுமே பயன்படும். இது பகுத்தறிவாளர்களும், ஜனநாயகவாதிகளும் கடைப்பிடிக்கக் கூடாத தவறான அணுகுமுறை.

• • •

**அ**ர்ச்சகர் நியமன விவகாரத்தில் நடந்து கொண்டிருப்பது என்ன? பிரம்மாண்டமான கோயில்கள் எனப்படுபவை தென்னாட்டில், அதிலும் குறிப்பாக தமிழகத்தில் மட்டுமே காணப்படுபவை. ஆகம விதிகள் எனப்படுபவையும் வட நாட்டில் கிடையாது. பல்லவர், சேர, சோழ, பாண்டியர், முகலாயப் பேரரசு, விஜயநகரப் பேரரசு, நாயக்கர்,



மனுநீதித் தீர்ப்பை எதிர்த்து அர்ச்சகர் கோலத்தைக் களையும் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தின் தலைவர் ரங்கநாதன்.

மராத்தியர், பாளையக்காரர், ஆங்கிலேயர் - எனப் பலருடைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவையும், திருத்தியமைக்கப்பட்டவையும்தான் நாம் காணுகின்ற கோயில்கள்.

"அரசியல், பொருளாதார, சமூக ஆதிக்கத்துக் கான நிறுவனங்களாகவே கோயில்கள் இருந்து வந்திருக்கின்றன. கோயில்களின் சொத்துகள், அவற்றின் மீதான அதிகாரம், அர்ச்சகர் பதவிகள் ஆகியவையும் காலந்தோறும் கை மாறியிருக் கின்றன." (பார்க்க: ஆகமங்களை மாற்றவே முடியாதா?, நீதிபதி சந்துரு, தமிழ் தி இந்து, சனவரி 3, 2016)

இத்தகைய மாற்றங்கள் எதுவும் ஆன்மீகக் காரணங்களுக்காக நிகழவில்லை. மாறாக, கோயில் சொத்தையும், அர்ச்சகர் பதவியையும் அபகரித்துக் கொண்டவர்கள், அவற்றைத் தங்களது பாரம்பரிய உரிமையாகப் பாதுகாத்துக் கொள்ளும் விதத்தில் விதிகளை உருவாக்கிக் கொண்டு, அவற்றை கடவுள் அருளியவை என்று கூறிக்கொண்டார்கள். ஒரு பெண்ணை வல்லுறவுக்கு ஆளாக்கி விட்டு, பின்னர் அவளுக்குத் தாலி கட்டி, அந்த உறவைப் புனிதமானதாகவும், சட்டப்படியானதாகவும் மாற்றிக் கொள்ளும் கயமைக்கும் இதற்கும் பாரிய வேறுபாடு இல்லை.

ஆட்சிகள் மாறினாலும், பிறப்பின் அடிப்படை யிலான இந்த சொத்துரிமையும் சாதி அடிப்படை யிலான சமூக அதிகாரமும் என்றென்றைக்கும் தங்களுக்கு மட்டுமே உரியது என்று பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டுத்தான் கல்வெட்டுகள், செப்பேடுகளில் அவை பதியப்பட்டன. தங்களுக்குக் கிடைத்திருக்கும் தகுதி என்பது மன்னன் அருளியது மட்டுமல்ல, அது இறைவன் அருளியது என்று நம்பவைக்கத்தான் ஆகமம், மரபு, சம்பிரதாயம் என்ற மதப் பூச்ச ாண்டிகள் காட்டப்படுகின்றன.

குறிப்பிட்ட பார்ப்பன உட்சாதியை அல்லது வகையறாவைச் சேர்ந்த தங்களைத் தவிர மற்ற சாதியினர் (பிற பார்ப்பனர்களையும் உள்ளிட்டு) மற்றும் பெண்கள் தொட்டால் சிலை தீட்டுப்பட்டு கடவுள் வெளியேறி விடுவார் என்று கடவுளே சொல்லி யிருப்பதாகவும், இதை இந்து மதத்தைச் சேர்ந்த அனைவரும் நம்புவதாகவும் பார்ப்பன அர்ச்சகர் கள் தமது வாதத்தில் கூறுகின்றனர். இப்படித்தான் தீண்டாமைக்கு அடிப் படையாக விளங்கும் 'தீட்டு' என்ற கருத்தாக்கம், மொத்த இந்து சமூகத் தின் மத நம்பிக்கையாக சித்தரிக் கப்படுகிறது.

இது தீண்டாமைக் குற்றம் என்றும் (உறுப்பு 17-க்கு எதிரானது), சாதி, பாலின அடிப்படையிலான பாரபட்சம் (உறுப்பு 14-க்கு எதிரானது) என்றும் மாணவர்கள் சார்பாக நாம் வைத்த வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டது. குறிப்பிட்ட வகையறாவைச் சேர்ந்தவர்களைத் தவிர, மற்றவர்கள் தொட்டால் தீட்டு என்று சொல்வதோ, மற்றவர்களை நியமிக்கக் கூடாது என்று கூறுவதோ தீண்டாமைக் குற்றமாகாது; இன்னின்ன சாதியினர் தொட்டால் தீட்டு என்றோ, இன்னின்ன சாதியினரை நியமிக்கக் கூடாது என்றோ சொன்னால்தான் அதனைத் தீண்டாமை அல்லது சாதி அடிப்படையிலான பாரபட்சம் என்று கருத முடியும் என்று கூறுகிறது உச்ச நீதிமன்றத் தீர்ப்பு. பெண்ணினம் முழுவதையுமே தீட்டாக்கி ஒதுக்கியிருப்பதையே, உறுப்பு 14-க்கு எதிரான குற்றமாக நீதிமன்றம் கருதவில்லை.

"என்னுடைய வீட்டுக்குள் எனக்கு விருப்ப மில்லாத நபரை அனுமதிக்க முடியாது என்று

ஆகமத்துக்கு அடிபணிந்து அர்ச்சகர் நியமனம் கேட்பது சரியா?



கூறுவது எப்படி சாதி பாராட்டுவதாகும்?'' என்று சாமர்த்தியமாக கேள்வி எழுப்பும் சாதி ஆதிக்கவாதிகளின் வாதத்திற்கும், உச்ச நீதி மன்றம் அளித்திருக்கும் மேற்கூறிய விளக்கத்திற்கும் அடிப்படையில் வேறுபாடில்லை.



எட்டு ஆண்டுகள் இடையறாத போராட்டத்துக்குப் பின்
உச்ச நீதிமன்றத்தின் அநீதித் தீர்ப்பு.

அது மட்டுமல்ல, குறிப்பிட்ட வகையறாவினர் (denomination) மட்டுமே அர்ச்சகராக முடியும் என்று கூறியிருப்பதால், இது சாதி அடிப்படையிலான ஒதுக்கல் அல்ல என்றும் கூறுகிறது தீர்ப்பு. ஆனால், ஆகம ரீதியான கோயில்கள் அனைத்திலும் பார்ப்பன சாதியைச் சேர்ந்த ஏதோ ஒரு வகையறாவினர்தான் அர்ச்சகராக இருக்கின்றனரேயன்றி, பார்ப்பனரல்லாத சாதியைச் சேர்ந்தவர்கள் ஒருவர்கூட எந்த ஆகமக் கோயிலிலும் அர்ச்சகராக இல்லை.

ஆனானப்பட்ட பெரியவாளே கர்ப்ப கிரஹத்துக்குள்ளே போக முடியாது எனும்போது, குப்பனும் சுப்பனும் உள்ளே நுழைவதாவது என்ற ஆதிக்க மனோபாவத்தில் நீதிபதிகளின் மூளைகள் ஊறியிருக்கும்போது, அந்த மூளைக்குள் ஜனநாயகம், சமத்துவம் போன்ற கருத்தாக்கங்களோ, கண்ணுக்கு நேரே தெரியும் உண்மைகளோ எப்படி உள்ளே நுழைய முடியும்?

மேலும், மத விவகாரங்களில் குறிப்பிட்ட உட்பிரிவினருக்கு வழங்கப்படும் இந்த சிறப்புச் சலுகை பொது வேலை வாய்ப்பில் சம உரிமையை மறுப்பதாகாது என்று அரசமைப்பு சட்டத்தின் உறுப்பு 16-இன் உட்பிரிவு 5 கூறுவதால், அந்த அடிப்படையிலும் கூட அர்ச்சகர் பணியில் சம உரிமை கோர இயலாது என்று மாணவர்களின் கோரிக்கையை நிராகரிக்கிறது இத்தீர்ப்பு.

இவை அனைத்திலும் நாம் காண்பது என்ன? அரசியல் சட்டம் இயற்றப்படுவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே ஆணாதிக்கம் தொடங்கி சாதி ஆதிக்கம் வரையிலான பலவகை ஆதிக்கங்களும் சமூக ஒழுங்குகளாகவும் மத சம்பிரதாயங்களாகவும் அரசின் சட்டங்களாகவும் ஒரே நேரத்தில் இருந்து வந்திருக்கின்றன. இறை நம்பிக்கையை மட்டுமல்ல, இந்த ஆதிக்க உணர்வுகளையும், ஆதிக்க நடைமுறைகளையும் மதம் சார்ந்த நம்பிக்கைகளாகவே மதவாதிகள் சித்தரிக்கின்றனர். அவர்கள் சித்தரிப்பது மட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டமும் இந்த ஆதிக்க நடைமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் மத நம்பிக்கையின் அங்கமாக அங்கீகரிக்கிறது.

ஒரு குறிப்பிட்ட மதத்தின் அத்தியாவசியமான நம்பிக்கை எது என்பதை அந்த மதத்தின் குருமார்களிடம் கேட்டு, அதனடிப்படையில் நீதி மன்றம் தீர்ப்பு வழங்குகிறது. இந்த வழக்கில் பார்த்தசாரதி கோயில் பட்டாச்சாரியார் சேசம்மாள் வழக்கில் கூறியவற்றை விரிவாக எடுத்தாண்டிருக்கிறது தற்போதைய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.

பார்ப்பனரல்லாதார் அர்ச்சகராக நியமனம் பெறுவதற்கு ஆகமத்தை ஆயுதமாகப் பயன்படுத்த எண்ணுவது பாமரத்தனமானது மட்டுமல்ல, ஆபத்தானது. அது சாதி - தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தை, பார்ப்பனரல்லாதோர்க்கு அர்ச்சகர் பணி நியமனம் பெறுவதற்கான தந்திரமாகச் சிறுமைப்படுத்திவிடும். பார்ப்பன மோசடியை அம்பலப்படுத்துவதற்கான ஒரு கருவியாக வேண்டுமானால் ஆகமங்கள் பயன்படலாமேயொழிய, பார்ப்பனியத்தை ஒழிப்பதற்கான ஆயுதமாக அதனை ஒருபோதும் பயன்படுத்த இயலாது.

தமது ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு ஆகமம், மரபு, வழமை என்று பல பொந்துகளைப் பார்ப்பனர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அந்தப் பொந்துகளுக்குள் புகுந்து பெருச்சாளியை அடிப்பதென்பது ஒருக்காலும் சாத்தியமில்லை. ஆகமம், மரபு ஆகியவற்றின் துணை கொண்டும், அவற்றின் வரம்புக்கு உட்பட்டும் சமத்துவ உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முயற்சிப்பது, மதத்தின் சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் மதத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று கூறுகின்ற மதவாதிகளின் அதிகாரத்துக்கு பணிந்து போவதாகவே இருக்கும்.

தி.மு.க. அரசின் அரசாணையை இத்தீர்ப்பு ரத்து செய்யவில்லையாதலால், ஆகம விதிப்படி அமைந்த கோயில்களில் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்களைப் பணி நியமனம் செய்யுமாறு அரசை வற்புறுத்தலாம் அல்லவா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. தாராளமாகப் போராடலாம். அந்தப் போராட்டம், இந்து மதத்தில் நிலவும் பார்ப்பன ஆதிக்கத்தையும், அதனைப் பாதுகாக்கின்ற அரசியல் சட்டத்தையும், பார்ப்பனியத்தைக் கண்டு அஞ்சிப் பதுங்குகின்ற அரசியல் கட்சிகளையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த நிச்சயம் பயன்படும்.

● **மருதையன்**

# தோழர் சாய்பாபா பிணை ரத்து, அருந்ததி ராய் மீது அவமதிப்பு வழக்கு:

# நீதிமன்றத்தின் என்கவுண்டர்!

புரட்சிகர ஜனநாயக முன்னணியின் இணைச் செயலரும், டெல்லி ராம்லால் ஆனந்த் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியருமான தோழர் சாய்பாபாவின் இடைக்காலப் பிணையை ரத்து செய்து, அவரைச் சிறைக்கு அனுப்பியிருக்கிறது மும்பை உயர்நீதி மன்றத்தின் நாக்பூர் அமர்வு.

மே 2014-இல் ஊஃபா சட்டம் (Unlawful Activities Prevention Act) என்ற ஆள்தூக்கி கருப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தோழர் சாய்பாபா, இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்; இதய நோயாளி. இன்னொருவர் துணையின்றிக் கழிவறையைக்கூடப் பயன்படுத்த முடியாதவர். கைது என்ற பெயரில் டெல்லியிலிருந்து யாருமறியாமல் அவரைக் கடத்திச் சென்ற மகாராட்டிர போலீசு, நாக்பூர் சிறையில் "அண்டா செல்" என்ற தனிமைக் கொட்டடியில் வைத்து, உதவிக்கு ஆளின்றித் தன்னந்தனியே தவித்து துடிதுடித்து சாகின்ற நிலைக்கு அவரைத் தள்ளியது. நாக்பூர் உயர்நீதி மன்றக் கிளை அவரது பிணை மனுவையும் நிராகரித்தது.


சிறைக்கொடுமையையும் தனக்கு மருத்துவ சிகிச்சை மறுக்கப்படுவதையும் எதிர்த்து தோழர் சாய்பாபா உண்ணாநிலைப் போராட்டத்தைத் தொடங்கினார். அவர் திட்டமிட்டே மரணத்துக்குத் தள்ளப்படுவதை அம்பலப்படுத்தி பூர்ணிமா உபாத்யாய் என்ற சமூக ஆர்வலர் எழுதிய கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு மும்பை உயர்நீதி மன்றத்தின் முதல் அமர்வு, கடந்த ஜூலை மாதத்தில் தானே முன்வந்து அவருக்கு 3 மாத இடைக்காலப் பிணை வழங்கியதுடன், மருத்துவ சிகிச்சைக்காக மேலும் 3 மாதங்கள் இடைக்காலப் பிணையை நீட்டிக்கவும் செய்தது.

சிறைக்கொடுமை காரணமாக ஒரு கை முற்றிலுமாக செயலிழந்து போனதுடன், சிறுநீரகம், பித்தப்பை உள்ளிட்ட உறுப்புகள் பாதிக்கப்பட்ட நிலையில், மருத்துவத்துக்காக தனது பிணையை நிரந்தரமாக்குமாறு கோரி நாக்பூர் அமர்வுக்கு மனுச் செய்தார் சாய்பாபா. அவரது மனுவை நிராகரித்ததோடு, அவரது இடைக் காலப் பிணையையும் ரத்து செய்து சிறைக்கு அனுப்பியிருக்கிறார், நாக்பூர் உயர்நீதி மன்ற நீதிபதி ஏ.பி.சவுதரி.

சாய்பாபாவைச் சிறையில் தள்ளியது மட்டுமின்றி, அவரது கைதைக் கண்டித்தும், பிணை மறுக்கப்படுவதை விமரிசித்தும் சென்ற மே மாதம் "அவுட்லுக்" வார ஏட்டில் அருந்ததி ராய் எழுதியிருந்த கட்டுரை நீதிமன்றத்தை அவமதிப்பதாகக் கூறி, அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு குற்றஞ்சாட்டி நோட்டீசும் அனுப்பியுள்ளார். 21 பக்கங்கள் கொண்ட நீதிபதி சவுதரியின் தீர்ப்பு முழுவதும், சாய்பாபாவுக்கும் அருந்ததி ராய்க்கும் எதிரான ஆத்திரமும் ஜனநாயக விரோத பாசிச வெறியுமே வெளிப்படுகின்றன.

"இதற்கு மேல் சாய்பாபாவை சிறையில் வைத்திருப்பது அவரது உயிர்வாழும் உரிமையைப் பறிப்பதாக அமையும்" என்ற அடிப்படையிலும், "அவருக்கு எதிராகப் பாரிய குற்றச்சாட்டுகள் இல்லை" என்ற அடிப்படையிலும்தான் ஆறு மாதங்களுக்கு முன்னர் மும்பை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி சாய்பாபாவுக்குப் பிணை வழங்கினார். இவ்விரண்டு உண்மைகளையுமே நீதிபதி சவுதரியின் தீர்ப்பு நிராகரிக்கிறது. "ஒரு அறிவு ஜீவியான சாய்பாபா தனது அறிவைத் தேச விரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தினார் என்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருப்பதாகவும், சிறை செல்லத் தகுதியான உடல்நிலையில் அவர் இருப்பதாகவும்" அபத்தமான ஆங்கிலத்தில் வக்கிரமாகக் குறிப்பிடுகிறது அந்தத் தீர்ப்பு.

"என் கணவர் சிறையிலிருந்து உயிருடன் திரும்புவாரா என்று தெரியவில்லை"
- தோழர் சாய்பாபாவின் மனைவி.



ஏற்கெனவே சாய்பாபாவுக்குப் பிணை மறுத்ததை விமரிசித்து அவுட்லுக் பத்திரிகையில் "பேராசிரியர் போர்க்கைதி" என்ற தலைப்பில் கட்டுரை எழுதிய அருந்ததி ராய், சாய்பாபாகைதுசெய்யப்பட்ட பின்புலத்தை அம்பலப்படுத்தியிருந்தார்.

2010-11ஆம் ஆண்டுகளில் மாவோயிஸ்டுகளுக்கு எதிராக "காட்டு வேட்டை" என்ற தாக்குதல் நடவடிக்கையை ஐ.மு.கூட்டணி அரசு அறிவித்தபோது, அதற்கு எதிரான இயக்கங்கள் நாடெங்கும் நடத்தப்படுவதற்கும், சர்வதேச அளவில் இதற்கு கண்டனங்கள் எழும்புவதற்கும் சாய்பாபா முக்கியப் பங்காற்றினார் என்ற காரணத்தினால் அவரைக் கைது செய்ய பல விதங்களில் அரசு முயன்றது என்று ராய் கூறுகின்றார். செப்.2013-இல் மகாராட்டிர மாநிலம் அகேரி என்ற சிற்றூரில் யாரோ ஒருவர் வீட்டில் திருடு போன பொருளைத் தேட வந்ததாகக் கூறி, 50 மகாராட்டிர மாநில போலீசார், டில்லியில் உள்ள சாய்பாபாவின் வீட்டைச் சோதனையிட்டு, அவரது கணினியின் வன்தகட்டைத் திருடிச்சென்றதையும், பின்னர் சனவரி 2014-இல் அவரை வீட்டிலேயே பல மணி நேரம் விசாரணை செய்ததையும், கடைசியாக மே 9, 2014 அன்று அவரைக் கடத்திச் சென்றதையும் குறிப்பிடும் ராய், இரண்டு கால்களும் இயங்காத, தப்பிப்போக முடியாத ஒரு மனிதனை, அவரது வீட்டிலோ பல்கலைக்கழக வளாகத்திலோ கைது செய்யும் தைரியம் மகாராட்டிர அரசின் போலீசுக்கு இல்லை என்று அக்கட்டுரையில் சாடுகிறார்.

இரண்டு கால்களும் ஒரு கையும் முற்றிலுமாகச் செயலிழந்துவிட்ட, அன்றாடம் மருத்துவ சிகிச்சை தேவைப்படுகின்ற ஒரு மனிதரை, தனிமைச் சிறையில் அடைத்து, ஒரு குவளை தண்ணீரை எடுத்துக் குடிப்பது முதல் கழிவறைக்குச் செல்வது வரை அனைத்துக்கும் அவரை நாள் முழுவதும் தவழ்ந்து தடுமாறித் தவிக்க விட்டதன் மூலம், தனது விரல்கூட அவர் மீது படாமலேயே, அவரைச் சித்திரவதை செய்வதும் அப்படியே சாகடிப்பதும்தான் போலீசின் நோக்கம் என்பதைக் கூர்மையாக அம்பலப்படுத்துகிறார் ராய்.

சாய்பாபாவை விடுவிக்காத நீதிமன்றம், குஜராத்தில் 97 பேரைக் கொலை செய்த வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பாபு பஜ்ரங்கியை கண் அறுவை சிகிச்சைக்காக விடுவித்திருப்பதையும்,




"இந்தியாவின் மிகவும் ஆபத்தான மனிதனா இவர்?" என்ற தலைப்பில் அவுட்லுக் ஆங்கில வார ஏட்டில் அருந்ததி ராய் எழுதிய கட்டுரைக்காக அவருக்கு எதிராக அவமதிப்பு நோட்டீசு அனுப்பியிருக்கிறார் நாக்பூர் உயர் நீதிமன்ற நீதிபதி.

இரட்டை ஆயுள் தண்டனை பெற்ற மாயா கோத்னானி காச நோய், மன அழுத்தம் போன்ற காரணங்களைக் கூறி விடுவிக்கப்பட்டிருப்பதையும், 3 போலி மோதல் கொலைகளுக்கு உத்தரவிட்ட அமித் ஷாவுக்கு பிணை வழங்கப்பட்டிருப்பதையும் எடுத்துக்காட்டுகிறார். நாக்பூர் உயர்நீதி மன்றக் கிளையால் மறுக்கப்பட்ட பிணையை மும்பை உயர் நீதிமன்றம் வழங்குவதற்கு இந்தக் கட்டுரை ஒரு காரணமாக இருக்கக்கூடும் என்ற ஆத்திரம் தீர்ப்பின் வாசகங்களில் வெளிப்படுகிறது.

"மத்திய அரசையும் மாநில அரசையும் போலீசையும் தனது கட்டுரையில் அவர் இவ்வளவு கடுமையாக விமரிசித்திருந்த போதிலும், இவர்கள் யாரும் அருந்ததி ராய் மீது ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை? இவ்வளவு கீழ்த் தரமான மொழியில் எழுதும் இவருக்கெல்லாம் எப்படி புக்கர் பரிசு கொடுத்தார்கள்? சாய்பாபாவுக்கு எதிரான போலீசு அத்துமீறல்களை அருந்ததி ராய் நேரில் பார்த்தாரா?" - இவையெல்லாம் சாய்பாபாவுக்கு பிணை மறுக்கும் தீர்ப்பில் அருந்ததி ராய்க்கு எதிராக நீதிபதி எழுப்பியிருக்கும் கேள்விகள்.

அருந்ததி ராய் நீதிமன்றத்தை அவமதித்து விட்டதாகக் குற்றம் சாட்டி அவருக்கு நோட்டீசு அனுப்பியிருக்கிறார் நீதிபதி சவுதரி. சாய்பாபாவுக்குப் பிணை வழங்கிய மும்பை உயர்நீதி மன்றம், வரம்பு மீறி நாக்பூர் கிளையின் அதிகார எல்லைக்குள் தலையிட்டு விட்டதாகவும் வெளிப்படையாகச் சாடுகிறார்.

தீர்ப்பை முழுமையாக அவதானித்தால் இது சாய்பாபாவுக்கும் அருந்ததி ராய்க்கும் எதிரான நடவடிக்கை மட்டுமல்ல. கருத்துரிமையையும் ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்கும் நிறுவனம் என்று கூறப்படும் நீதிமன்றத்தின் யோக்கியதையைக் காட்டும் நடவடிக்கை என்பதைப் புரிந்து கொள்ள இயலும். தப்பித்தவறி ஒரு நீதிபதி ஜனநாயக உணர்வுடன் நடந்து கொண்டால், அவரை மிரட்டிப் பணிய வைக்கும் அளவுக்கு நீதித்துறைக்குள் பாசிச சக்திகள் வலுப்பெற்று வருகின்றன. நாக்பூர் முதல் சென்னை உயர்நீதி மன்றம் வரை நாம் காணும் நிகழ்வுகள் அனைத்தும் நீதித்துறை காவிமயமாகி வருவதன் வெவ்வேறு விதமான வெளிப்பாடுகளே.

• அஜித்

# சென்னை மாநகரம்:

# சட்டவிரோத சிங்காரம்!

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் சென்னை நகரம் அடைந்துள்ள 'வளர்ச்சி'யில் சரிபாதி சட்டவிரோதமான முறையில் உருவானதாகும்.

"**சி**ங்கார சென்னை", "எழில்மிகு சென்னை" என்றெல்லாம் அடைமொழியிட்டு அழைக்கப்படும் தமிழகத்தின் தலைநகரத்தைச் "சட்டவிரோத நகரம்" எனக் குறிப்பிடுகிறார், அகமதாபாத் நகரிலுள்ள சுற்றுப்புறச் சூழல் திட்டம் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சிறீவத்சன். சென்னை, குற்றவாளிகளின் உலகமாக, நிழல் உலக மாஃபியாக்களின் ராஜ்ஜியமாக மாறிவிட்டது என்ற பொருளில் அல்ல; மாறாக, கடந்த இருபதாண்டுகளில் சென்னை நகரம் அடைந்திருக்கும் 'வளர்ச்சியை' முன்வைத்துதான், அதனைச் சட்டவிரோத நகரமாகக் குறிப்பிடுகிறார், அவர்.

சென்னையின் வளர்ச்சியை முதலாளித்துவ பொருளாதார நிபுணர்கள் எதனைக் கொண்டு மதிப்பிடுகிறார்கள்? வீடு, கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் அடித்தட்டு மக்களுக்குக் கிடைப்பதை முன்வைத்தா? இல்லை; மாறாக, மால்கள், மல்டிபிளக்ஸ் திரையரங்குகள், மேம்பாலங்கள், விரைவுச் சாலைகள், ஐ.டி. தொழில்நுட்ப பூங்காக்கள், விமான நிலையங்கள் - இவற்றின் எண்ணிக்கையை வைத்து, தனியார்மயம்-தாராளமயத்திற்கு ஏற்றவாறு பல்வேறு அளவுகோல்களை முன்வைத்து வளர்ச்சியை மதிப்பிடுகிறார்கள். பேராசிரியர் சிறீவத்சன் இந்த அளவுகோல்களை விமர்சிக்கவில்லையென்றாலும், கடந்த இருபதாண்டுகளில் சென்னையில் எழுந்து நிற்கும் கட்டிடங்களில் சரிபாதிக்கும் மேலானவை சட்டவிரோதமானவை என்று குறிப்பிடுவதோடு, தமிழக அரசும் நீதிமன்றங்களும் அதனை ஒத்துக்கொண்டுள்ள உண்மையையும் சுட்டிக் காட்டுகிறார்.

சென்னையில் சட்டவிரோதமாகவும் விதிமுறைகளை மீறியும் கட்டப்பட்ட குடியிருப்புகளையும், வணிக வளாகங்களையும் இடித்துத் தள்ளுவதற்கு மாறாக, அவற்றைச் சட்டபூர்வமாக்கும் அயோக்கியத்தனத்தைத் தொடங்கி வைத்தது, எம்.ஜி.ஆரின் மனைவி என்ற வாரிசுரிமை அடிப்படையில் முதல்வர் நாற்காலியில் உட்கார்ந்த வி.என்.ஜானகி அரசுதான். அவரைப் பின்னிருந்து இயக்கிய கும்பலின் தலைவன் எம்.ஜி.ஆரின் பினாமியான ஆர்.எம்.வீரப்பன். அந்த அரசு வெகுநாட்கள் நீடிக்க முடியாது என்றிருந்த நிலையில் தமிழ்நாட்டைக் கொள்ளையடிக்கும் வேலையை வெகுவேகமாக நடத்தியது அக்கும்பல். அதிலொன்றுதான் சென்னை நகரக் கட்டுமானங்களை முறைப்படுத்தும் திட்டம். இதன்படி, கட்டிடம் எங்கு கட்டப்பட்டிருந்தாலும், எந்த உயரத்துக்குக் கட்டப்பட்டிருந்தாலும் ஒரு சிறிய தொகையை அபராதமாகக் கட்டிவிட்டு குற்ற நடவடிக்கையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

அடையாறு ஆற்றை மறித்து ஓடுபாதை தளம் அமைக்கப்பட்டதால் வெள்ளத்தில் மூழ்கிப் போன சென்னை விமான நிலையம்.



வி.என்.ஜானகிக்குப் பிறகு 1988-இல் ஆட்சியைப் பிடித்த தி.மு.க.வும், அதன் பின் 1991-இல் ஆட்சிக்கு வந்த ஜெயாவும் இந்த முறைப்படுத்தும் திட்டத்தை இன்னும் வேகத்தோடு அமல்படுத்தினார்கள். இந்த முறைப்படுத்தும் திட்டத்தை விட மோசமானதொரு நடவடிக்கையை 1998-இல் தி.மு.க. அமல்படுத்தியது. "சென்னையில் மூன்று இலட்சத்திற்கு அதிகமாக கட்டிடங்கள் விதிமுறைகளை மீறியும், சட்டவிரோதமாகவும் கட்டப்பட்டிருப்

பதாகவும், அவற்றைத் தண்டிப்பது நிர்வாகரீதியாக இயலாத செயல்'' என்பதால், சென்னையைச் சுற்றி 1998-க்கு முன்பாகக் கட்டப்பட்ட கட்டிடங்களை முறைப்படுத்துவதற்கு ஏற்ப நகரத் திட்டமிடுதல் சட்டத்திலேயே திருத்தங்களைக் கொண்டு வந்தது. "ஒரு முறைக்கு மேல் இந்தச் சலுகைகளைக் காட்டக்கூடாது'' எனப் பூச்சாண்டி காட்டும் ஒரு தீர்ப்பை வழங்கி, இந்த அயோக்கியத்தனத்திற்கு அங்கீகாரம் அளித்தது, உச்சநீதி மன்றம்.



சென்னை-விருகம்பாக்கம் பகுதியில் கால்வாயைத் தூர்த்துக் கட்டப்படும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கான அடுக்குமாடிக் குடியிருப்பு.

ஆனால், இந்தச் சலுகை 1996-2001 தி.மு.க. ஆட்சியிலும், அதனைத் தொடர்ந்து வந்த 2001-2006 அ.தி.மு.க. ஆட்சியிலும் பலமுறை நீட்டிக்கப்பட்டன. 2006-இல் மீண்டும் ஆட்சியைப் பிடித்த தி.மு.க., நகரத் திட்டமிடுதல் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவது குறித்து ஆராய்வதற்காக நீதிபதி மோகன் கமிட்டியை அமைத்தது. நீதிபதி மோகன் தி.மு.க.வின் கைத்தடி என்பது உலகமே அறிந்த உண்மை. அக்கமிட்டி சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட கட்டிடங்களை இழுத்துப் பூட்ட வேண்டும், கடுமையான அபராதங்களை விதிக்க வேண்டும் என ஒருபுறம் உதார் காட்டிவிட்டு, இன்னொருபுறம் 2007 ஜூலைக்கு முன்பாக விதிமுறைகளை மீறிக் கட்டப்பட்ட கட்டிடங்களை முறைப்படுத்தலாம் என்ற சலுகையை வாரி வழங்கியது.

ரியல் எஸ்டேட் துறையின் வளர்ச்சிதான் தேசத்தின் வளர்ச்சியாக முன்னிறுத்தப்பட்ட நேரத்தில் தி.மு.க., அ.தி.மு.க. அரசுகள் சட்டவிரோத கட்டிடங்களை வரன்முறைப்படுத்தும் திருத்தங்களை அடுத்தடுத்து கொண்டு வந்ததை தற்செயலானதாகக் கருத முடியாது. 1988 தொடங்கி 2007 வரையில் கொண்டுவரப்பட்ட இந்த ஒவ்வொரு திருத்தமும் சலுகையும் தி.நகர் மற்றும் நகரின் பல பகுதிகளில் சட்டவிரோதமாகவும், உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இன்றியும் கட்டப்பட்ட வணிக வளாகங்களுக்கு; ஏரிகளை, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருந்த தனியார் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அங்கீகாரம் அளித்ததோடு, ரியல் எஸ்டேட் தொழிலில் மாஃபியாக்களின் ஆதிக்கத்தையும் உறுதிப்படுத்தியது.

2008-இல் சென்னையை அடுத்துள்ள பேரூராட்சிகள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வில், சோழிங்கநல்லூர், குன்றத்தூர், பெருங்குடி, பள்ளிகரணை பகுதிகளில் மட்டும் ஜூலை 2007 தொடங்கி மே 2008-க்குள் 1,222 கட்டுமான திட்டங்கள் சட்டவிரோதமான முறையில் முளைத்திருப்பது கண்டறியப்பட்டது.

இவ்வாறு விதிமுறைகளை மீறிக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் ஒருபுறமிருக்க, நவீனமான பல அடுக்குகளைக் கொண்ட குடியிருப்புகளையும், தொழில்நுட்ப பூங்காக்கள், மேம்பாலங்கள், சாலைகள் உள்ளிட்ட அடிக்கட்டுமான திட்டங்களையும் உருவாக்குவது தொடர்பாக அரசு உருவாக்கியுள்ள விதிமுறைகள் இயற்கைக்கும் அறிவியலுக்கும் பொதுஅறிவுக்கும் பொதுநன்மைக்கும் எதிரானவை என்பதே உண்மை. இதற்கொரு உதாரணமாக, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை நவீனப்படுத்தி, விரிவுபடுத்தி அமைக்கப்பட்டுள்ள அதன் புதிய ஓடுபாதை தடங்களைக் குறிப்பிடலாம்.

சென்னை கடல்மட்டத்திலிருந்து வெறும் 22 அடி மட்டுமே உயரமுள்ள, கிடைமட்டமான நகரம். வடகிழக்குப் பருவ மழை காலத்தில் புயல்களையும், பெருமழையையும் எதிர்கொள்ளும் பூகோள அமைப்பையும் கொண்டுள்ளது. இப்படியான பாரதூரமான நிலவியல் அமைப்பு இருந்தபோதிலும் தென் சென்னையில் ஓடும் அடையாறும்; மத்திய சென்னையில் ஓடும் கூவமும்; வடசென்னையில் ஓடும் கொசஸ்தலை ஆறும் அதிக அளவிலான வெள்ள நீரை உள்வாங்கி கடலுக்குள் கொண்டு சென்றும்; கடல் பொங்கும் சமயங்களில் கடல் நீர் நகருக்குள் புகாமல் எடுத்துக் கொள்ளும் வண்ணமும் அமைந்து சென்னையைக் காக்கும் இயற்கையான அரண்களாக இருந்துவந்தன.

சென்னையில் பெய்யும் மொத்த மழை நீரில் 19 சதவீதமும்; செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீரும் அடையாற்றின் வழியாகத்தான் கடலுக்குள் செல்லும். அதேசமயம் அடையாறின் பாதை கடலை நோக்கி நேர் சரிவாக இல்லாமல் ஏற்ற இறக்கமாக அமைந்திருக்கிறது. மீனம்பாக்கத்தில் 12 அடி உயரத்தில் காணப்படும் அடையாற்றின் பாதை, அதன் பிறகு 10 முதல் 20 அடி உயர்வதும் பின்பு சரிவதுமாக இருக்கிறது. அடையாற்றின் இந்த ஏற்ற இறக்கப் பயணத்தைப் புறக்கணித்துவிட்டும், அதனை மறித்தும் மீனம்பாக்கம் விமான நிலையத்தின் புதிய

ஓடுபாதையை அமைத்திருக்கிறது, அரசு. அதிகார வர்க்கத்தின் இந்த தான்தோன்றித்தனம், முட்டாள்தனத்தின் விளைவாகத்தான் சென்னை விமான நிலையம் வெள்ளத்தில் மூழ்கியதே அன்றி, பெருமழையால் அல்ல.



திருநின்றவூரிலுள்ள ஏரியையொட்டி
அரசு பட்டா போட்டுக் கொடுத்த குடியிருப்புப் பகுதி மக்களின் துயரம்.

சென்னை-மணப்பாக்கத்தில் அமைந்துள்ள டி.எல்.எஃப். தகவல் தொழில்நுட்ப பூங்கா உலகமயமான சென்னையின் அடையாளங்களுள் ஒன்று. அடையாற்றின் கரையோரம் குடிசைகள் போடுவதைக் குற்றமாகக் கூறும் அரசு, அடையாற்றின் கரையோரமாக 45 ஏக்கர் பரப்பளவில் டி.எல்.எஃப்.இன் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைவதற்கு அனுமதியளித்திருக்கிறது. அவ்வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடங்கள் 10 அடுக்கு மாடிகளையும் தரைக்குக் கீழே இரண்டு தளங்களையும் அமைத்துக் கட்டப்பட்டுள்ளன. ஆற்றின் கரையோரம் தரைக்குக் கீழே இரண்டு தளங்களை அமைப்பது வெள்ள அபாயத்திற்கு வாசற்கதவைத் திறந்துவிடுவதற்கு ஒப்பானது என்ற பொது அறிவுகூட இல்லாமல் இத்தொழில்நுட்ப பூங்கா உருவாக்கப்பட்டதன் விளைவாகத்தான், அதன் கீழ் இரண்டு தளங்களும், தரைத்தளமும் வெள்ளத்தில் மூழ்கிப் போயின.

ஏறத்தாழ 50-க்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்களின் அலுவலகங்களும், 60,000 ஊழியர்களும் இயங்கும் அவ்வளாகத்தின் கீழ்தளத்தில்தான் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை ஏற்றி வரும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு, அதன் ஓட்டுநர்கள் காத்திருப்பார்கள். ஏறத்தாழ 600 கார்கள் வெள்ளத்தில் மூழ்கிப் போனதாக கணக்குச் சொல்லியுள்ள டி.எல்.எஃப். நிர்வாகம், வெள்ளம் கீழ் தளங்களை மூழ்கடித்தபோது எத்துணை ஓட்டுநர்கள் அங்கிருந்தனர், தரைதளத்தில் பணியாற்றிய ஊழியர்கள் எத்தனை பேர், அவர்களுள் வெள்ளத்தோடு போனவர்கள் எத்தனை பேர், தப்பிப் பிழைத்தவர்கள் எத்தனை பேர் என்பதை மட்டும் வெளியிட மறுக்கிறது.

ஏதோவொரு டி.எல்.எஃப். தொழில்நுட்ப பூங்கா மட்டுமல்ல, சென்னையின் ஐ.டி. தாழ்வாரம் (I.T.Corridor) என்றழைக்கப்படும் பழைய மகாபலிபுரம் சாலை ஒட்டுமொத்தமும் இயற்கைக்கு எதிராகவும், தொழில்நுட்பத் தவறுகளோடும் உருவாக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடுகிறது, பிரண்ட்லைன் இதழ். அவ்விதழில் வெளிவந்த "வளர்ச்சியின் பேரிழப்பு" என்ற கட்டுரையில், "பழைய மகாபலிபுரம் சாலையின் இரு பக்கங்களிலும் உள்ள சர்வீஸ் சாலைகள் முக்கிய சாலையை விட உயரமாக அமைக்கப்பட்டிருப்பது அடிப்படையிலேயே தொழில்நுட்பரீதியில் தவறானது. இதனால் மழைக்காலத்தில் சர்வீஸ் சாலையிலும் அதனையொட்டியுள்ள பகுதியிலும் சேரும் மழைநீர் முழுவதும் முக்கிய சாலையில் இறங்கி, அதனை நிறைத்து விடுகிறது. இதனால் ஐ.டி. நிறுவனங்களும், உயிர்தொழில்நுட்ப பூங்காவும் அமைந்துள்ள சோழிங்கநல்லூர், சிறுசேரி பகுதிகள் மழைநீர் தேங்கி வெள்ளக்காடாகி விடுகின்றன. இந்தத் தொழில்நுட்பத் தவறைச் சரி செய்தாலும்கூட, ஐ.டி. நிறுவனங்களும், அவை அமைந்துள்ள பகுதிகளும் வெள்ளத்தில் மிதப்பதைத் தவிர்க்க முடியாது.

ஏனென்றால், அப்பகுதி முழுவதும் இயற்கையாகவே அமைந்த நீர்ப்பிடிப்பு பகுதியாகும். இந்தச் சாலையின் ஒருபுறம் பள்ளிகரணை சதுப்பு நிலமும், மற்றொருபுறம் முட்டுக்காடு ஏரியும் அமைந்துள்ளன. 1990-கள் வரை சதுப்பு நிலங்களும், வயல்வெளிகளும், தென்னந்தோப்புகளும், உப்பளங்களும் நிறைந்திருந்த இந்தப் பகுதியைத்தான் இப்பொழுது ஐ.டி. நிறுவனங்களும், புதுப் பணக்காரர்களின் தனிக் குடியிருப்புகளும் ஆக்கிரமித்துள்ளன" என இயற்கைக்கு எதிரான இந்த வளர்ச்சியை விவரித்திருக்கிறது.

ஐ.டி. பூங்காக்கள் மட்டுமின்றி, நவீன சென்னையின் அடையாளமாகக் கொண்டாடப்பட்ட ஒவ்வொன்றும் சென்னை வெள்ளத்தில் மூழ்குவதற்குக் காரணமாக இருந்துள்ளன.

"தேசிய நெடுஞ்சாலை 45-ஐயும், தேசிய நெடுஞ்சாலை 4-ஐயும் இணைக்கும் சாலை கிழக்கில் வடியும் மழைநீரைத் தடுத்து அண்ணா நகர், போரூர், வானகரம், மதுரவாயல், முகப்பேர், அம்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடித்தது."

"பக்கிங்காம் கால்வாயை ஆக்கிரமித்துதான் பறக்கும் ரயில் நிலையங்களும் அந்த ரயில் ஓடுவதற்கான பாலங்களும் கட்டப்பட்டுள்ளன."

"கூவம் ஆற்றை ஆக்கிரமித்துதான் சென்னை துறைமுகத்தை இணைக்கும் மேம்பால விரைவுச்



சென்னை-சைதாப்பேட்டை பகுதியில் அடையாறின் கரையோரமாகக் குடியிருந்த ஏழைகள் புறநகர் பகுதிக்கு அப்புறப்படுத்தப்படும் அரசின் வன்முறை.

சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டு, தூண்கள் நிறுவப்பட்டுள்ளன.''

"மெட்ரோ ரயில் போக்குவரத்திற்காக சைதாப்பேட்டை பகுதியில் தோண்டப்பட்ட சுரங்கத்தினுள் புகுந்த அடையாறு வெள்ள நீர் ஐந்து கிலோ மீட்டர் தூரம் பயணித்து தேனாம்பேட்டையில் உள்ள சுரங்க முகப்பு வழியாக வெளியேறி, அப்பகுதியை வெள்ளக்காடாக்கியிருக்கிறது. இதுபோல, திருமங்கலம் அருகே தோண்டப்பட்ட சுரங்கத்தினுள் புகுந்த வெள்ள நீர் அண்ணா நகர் ரவுண்டானா பகுதியில் வெளியேறி, அப்பகுதியை வெள்ளத்தில் மூழ்கடித்திருக்கிறது.''

மேலும், சென்னை எவ்வித அறிவுபூர்வமான திட்டமிடலும் இன்றி வீங்கியிருப்பதையும் இந்த வெள்ளம் அம்பலப்படுத்தியிருக்கிறது. சாலைகள், மழைநீர் வடிகால்கள், கழிவுநீர் கால்வாய்கள் உள்ளிட்ட அடிப்படை கட்டுமான வசதிகளின்றி புதுப்புது நகர்களும் குடியிருப்புகளும் உருவாக அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்திய தொலைஉணர்வு சமூகத்தின் இதழில் வெளிவந்துள்ள ஆய்வுக் கட்டுரை, "கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் சென்னையில் உள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை 13 மடங்கு அதிகரித்திருக்கும் அதேநேரத்தில், நீர்ப்பிடிப்பு பகுதிகளும், திறந்தவெளி இடங்களும் முன்பிருந்ததைவிட நான்கில் ஒரு பங்காகச் சுருங்கிப் போனதைச் சுட்டிக் காட்டுகிறது.''

"சென்னையின் பெரும்பாலான சாலைகள் மழைநீர் வடிவதற்கு ஏற்ற சாய்மான கோணத்தில் போடப்படவில்லை; மழைநீர் வடிகால் வெள்ள நீர் வடிந்து செல்வதற்கு ஏற்ற வாட்டத்தோடு கட்டப்படவில்லை; சூரி எனச் சுட்டிக் காட்டுகிறார், சுற்றுப்புறச் சூழல் நிபுணர் சிறீபிரகாஷ்.

15 மண்டலங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள சென்னை மாநகராட்சியில் 8 மண்டலங்களில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்படவேயில்லை. 40 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையின் மக்கட்தொகையும் குறைவு, அடுக்குமாடிக் குடியிருப்புகளும், வணிக வளாகங்களும் இந்தளவிற்கு இத்துணை பெரிதாக இருந்ததில்லை. அப்பொழுது உருவாக்கப்பட்ட கழிவு நீர் வடிகால்களால் தற்பொழுது சென்னை அடைந்துள்ள வீக்கத்தைத் தாங்க முடியவில்லை. கழிவு நீரை அகற்றுவதற்கோ, அதனைச் சொந்த செலவில் மறு சுழற்சி செய்து பயன்படுத்துவதற்கோ ஏற்ற அமைப்புகள் இல்லாமலேயே மால்கள், ஐந்து நட்சத்திர விடுதிகள், பெரும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் உள்ளிட்ட கட்டுமானத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

இத்தகைய அராஜக வளர்ச்சித் திட்டங்களாலும், சட்டவிரோத, சட்டபூர்வ ஆக்கிரமிப்புகளாலும் இயற்கையான வடிகால்களாக அமைந்திருக்கும் அடையாறு, கூவம் ஆறுகளும், கால்வாய்களும் குறுகிப் போய் அதன் கொள்ளவும் பாதியாகச் சுருங்கிப் போய்விட்டது. குறிப்பாக, விமான நிலையப் பகுதியில் 222 மீட்டர் அகலத்திலிருக்கும் அடையாறு ஆறு, நந்தம்பாக்கம் பகுதியில் 59 மீட்டராகக் குறுகிவிடுகிறது. இந்தப் பகுதியில்தான் அதிக அளவு ஆக்கிரமிப்புகள் உள்ளன. 2005-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்பொழுது 55 ஆயிரம் கன அடி தண்ணீரை வெளியேற்றிய அடையாற்றில் இப்பொழுது 30,000 கன அடி நீரைக் கூட வெளியேற்ற முடியவில்லை. அந்த அளவிற்கு ஒவ்வொரு நாளும் அடையாறு ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது; அதன் படுகைகள் மேடுதட்டி வருகின்றன.

இதன் பிறகும்கூட ஏரிகள், ஆறுகளை ஆக்கிரமித்து உருவாக்கப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளோ, ஐ.டி.பூங்காக்களோ, மால்களோ, தனியார் கல்லூரிகளோ அரசினால் அகற்றப்படவில்லை. அடையாற்றின் கரையோரமாக குடிசையில், ஒண்டுக்குடித்தனத்தில் வசித்துவந்த கூலித் தொழிலாளர்கள், அடித்தட்டு பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள்தான் நகரிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றன. செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட வெள்ளம் ஏழை மக்களின் குடிசைகளை, அவர்களின் கடந்த கால சேமிப்புகளை அழித்தது. ஆனால், ஆக்கிரமிப்புகளை அகற்றுவது என்ற பெயரில் அடித்தட்டு மக்கள் மீது அரசு நேரடியாகத் தொடுக்கும் தாக்குதல் அவர்களின் எதிர்கால வாழ்க்கையையே சூறையாடுகிறது.

• செல்வம்

## மியாட் மருத்துவமனை:

# ஐந்து நட்சத்திரக் கொலைக்கூடம்!

**மியாட் மருத்துவமனையில் நடந்த சாவுகள், தனியார் மருத்துவமனைகள் நோயாளிகளின் உயிரோடு விளையாடும் விதத்தில் தான்தோன்றித்தனமாக நடந்து வருவதை அம்பலப்படுத்திவிட்டது.**

1990-களுக்குப் பிறகு சென்னையில் தனியார் கார்ப்பரேட் மருத்துவமனைகள் புற்றீசல்களாக முளைத்ததைத் தொடர்ந்து, சென்னை மாநகரம் மருத்துவ சுற்றுலாவின் மையமாக முன்னிறுத்தப்பட்டது. அதாவது, உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சேவையை குறைந்த கட்டணத்தில் வழங்கும் ஜாம்பவான்களாக கார்ப்பரேட் மருத்துவமனைகள் முன்னிறுத்தப்பட்டன. இதனை உறுதி செய்வதற்கு ஏற்ப பளபளவென கிரானைட் கற்களால் இழைத்துக் கட்டப்பட்ட பல அடுக்குமாடி கட்டிடங்கள், நவீன மருத்துவ உபகரணங்கள், அமெரிக்காவில் பயிற்சி பெற்ற இந்திய மருத்துவர்கள், அறுவை சிகிச்சைகளின் வெற்றி குறித்த விளம்பங்கள், இத்யாதி இத்யாதி என ஜோடனைகள் செய்யப்பட்டு, கார்ப்பரேட் மருத்துவமனைகள் கடவுளுக்கு நிகராக நிறுத்தப்பட்டன.

இந்த மிகைப்படுத்தப்பட்ட ஒப்பனைகள் அனைத்தையும் சென்னையில் ஏற்பட்ட வெள்ளம் அழித்து, இந்த நரிகளின் சாயத்தை வெளுக்கச் செய்துவிட்டது. சென்னையில் போரூர் அருகிலுள்ள மியாட் சர்வதேச மருத்துவமனையில் நிகழ்ந்த உள்நோயாளிகள் 18 பேரின் அகால மரணம், ஏதோவொரு தனியார் மருத்துவமனையின் தரம், சேவை, நிர்வாகத்தின் பொறுப்பற்ற தன்மை ஆகியவற்றை மட்டும் அம்பலப்படுத்திக் காட்டவில்லை. அதற்கும் மேலாக, எவ்வித விதிமுறைகள், ஒழுங்குபடுத்தும் சட்டங்களும் இல்லாமல், நோயாளிகளின் உயிரோடு விளையாடும் விதத்தில், தான்தோன்றித்தனமாக தனியார் மருத்துவமனை என்ற அமைப்பு முறை இயங்கி வருவதையும் சேர்த்தே காட்டிச் சென்றுவிட்டது.

சென்னையில் டிச.1, 2 தேதிகளில் பெருமழை பெய்த சமயத்தில், மியாட் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளுள் 18 பேருக்குத் தொடர்ந்து ஆக்ஸிஜன் செலுத்து முடியாமல் போனதால், அவர்கள் ஒவ்வொருவராக அடுத்தடுத்து இறந்து போனார்கள். அம்மருத்துவமனையில் போதிய ஆக்ஸிஜன் சிலிண்டர்களும் மின் சாரமும் இல்லாமல் போனதுதான் இந்த மரணத்திற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

சென்னையில் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக நான்கு பெரிய அரசு மருத்துவமனைகள் உள்ளன. இப்பெருமழையின்போது அந்த அரசு மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் தட்டுப்பாடு ஏற்படவில்லை. மேலும், சென்னை நகரம் முழுவதும் மின்சாரம் தடைபட்ட பிறகும், ஜெனரேட்டர்களைக் கொண்டு அம்மருத்துவமனைகள் தடையின்றி இயக்கப்பட்டன. ஆனால், தன்னை சர்வதேச தரத்திலான மருத்துவமனை எனப் பீற்றிக் கொண்ட மியாட், உள்நாட்டு நோயாளிகள் பிரிவு, வெளிநாட்டு நோயாளிகள் பிரிவு எனப் பிரித்து பந்தா காட்டி வந்த மியாட், ஒரு பெருமழையைச் சமாளிக்கக்கூடிய திறனின்றி இருந்தது இந்தச் சாவுகளின் மூலம் அம்பலமாகியிருக்கிறது.

முதலாவதாக, மியாட் மருத்துவமனை ஒரு பாதுகாப்பான இடத்தில் கட்டப்படவில்லை. அம்மருத்துவமனை மணப்பாக்கம் என்ற ஏரியை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருக்கிறது. இதனால், ஒரு ஆண்டு இல்லாவிட்டால், இன்னொரு ஆண்டில் அம்மருத்துவமனை வெள்ளத்தால் சூழப்படும் அபாயம் இருப்பது அம்மருத்துவமனையின் முதலாளியான டாக்டர் மோகன்தாஸ் குடும்பத்திற்கு நன்கு தெரியும்.

நவம்பர் முதல் வாரத்தில் பெய்த மழையின் போதே அம்மருத்துவமனையில் மழை நீர் புகுந்து சேதாரங்கள் ஏற்பட்டன. இதனால் தரை தளத்திலிருந்த அவசர சிகிச்சை பிரிவை மேல்தளத்திற்கு நிர்வாகம் மாற்றியிருக்கிறது. ஆனாலும், தரை தளத்திலிருந்த ஆக்ஸிஜன் சிலிண்டர்களையும், ஜெனரேட்டரையும் பாதுகாப்பான மாற்று இடத்திற்குக் கொண்டு செல்ல முன்னேற்பாடுகள் செய்யப்படவில்லை.

நவம்பர் இறுதி வாரத்தில் கனமழை பெய்யும் வாய்ப்பிருப்பதை வானிலை அறிக்கை உறுதிப்படுத்திய பிறகும்கூட அம்மருத்துவமனை நிர்வாகம் அ.தி.மு.க. அரசு போலவே அலட்சியமாக நடந்து கொண்டது.



மணப்பாக்கம் ஏரியை ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட மியாட் மருத்துவமனைக்குள் புகுந்த வெள்ளம்.

டிச.1 அன்று இரவு பெய்த கனமழையும், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து திறந்து விடப்பட்ட நீரும் சேர்ந்து அம்மருத்துவமனையின் சுற்றுச்சுவரை உடைத்துக் கொண்டு எட்டு அடி உயரத்திற்கு மருத்துவமனைக்குள் பாய்ந்து ஆக்ஸிஜன் சிலிண்டர் அறை, ஜெனரேட்டர் அறை உள்ளிட்டு கீழ்தளத்தை நாசப்படுத்தியது. தன்னிடம் ஹெலி ஆம்புலன்ஸ் இருப்பதாகப் பீற்றிக் கொண்ட மியாட் நிர்வாகம், செயற்கை சுவாசத்திலிருந்த நோயாளிகளை சாதாரண ஆம்புலன்ஸில்கூட வேறு மருத்துவமனைக்கு மாற்றும் நடவடிக்கையை உடனடியாக எடுக்கவில்லை. டிசம்பர் 3-ந் தேதி காலையில்தான் ஆக்ஸிஜன் சிலிண்டர் தேவைப்படுவதாக அரசு மருத்துவமனையை மியாட் நிர்வாகம் நாடியதாகக் கூறப்படுகிறது. ஆனால், அதற்கு முன்பே தீவிர சிகிச்சை பிரிவில் சாவுகள் விழத் தொடங்கிவிட்டன. அரசு மருத்துவமனையிலிருந்து ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் அனுப்பி வைக்கப்பட்ட பிறகும் மியாட்டில் பிணங்கள் விழுவது நிற்கவில்லை. காரணம், இப்படிபட்ட பேரிடரைச் சமாளிக்கக்கூடிய விதத்தில் அம்மருத்துவமனையும் கட்டப்படவில்லை; ஊழியர்களும் பயிற்றுவிக்கப்படவில்லை.

குறிப்பாக, தீவிர சிகிச்சை பிரிவில் அவசர கால ஜெனரேட்டர்கள், மொபைல் ஜெனரேட்டர்கள் இருக்க வேண்டும் என்ற சாதாரண விதியைக்கூட இந்த மருத்துவமனை பின்பற்றவில்லை. இதைவிடக் கொடுமையாக, மருத்துவமனையில் வெள்ளம் புகுந்தவுடனேயே, டாக்டர் பாஷ்யம் மற்றும் ஒரு சில செவிலியர்களைத் தவிர, மற்ற மருத்துவர்களும், ஊழியர்களும் நோயாளிகளை அம்போ என்று கைவிட்டுவிட்டு ஓடிவிட்டனர். குறிப்பாக, அம்மருத்துவமனையின் முதலாளி மோகன்தாஸ் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடும் திருடன் கணக்காக நடந்து கொண்டார். நோயாளிகளைக் காப்பாற்றுவதைவிட, 18 நோயாளிகள் இறந்து போனதை அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்குக்கூடத் தெரிவிக்காமல், தங்களின் குற்றத்தை மூடிமறைக்க அரசுடன் பேரம் நடத்துவதில்தான் அக்கறை காட்டியிருக்கிறார்.

இதனையடுத்துதான், மியாட்டில் மேலும் பிணங்கள் விழுவதைத் தடுக்கும் நோக்கில் 250 கிலோவாட் திறன் கொண்ட ஜெனரேட்டர் மியாட் மருத்துவமனைக்கு அரசால் அனுப்பி வைக்கப்பட்டதோடு, வெளியிலிருந்து ஏழு ஆம்புலன்ஸ்கள் வரவழைக்கப்பட்டு, மியாட்டில் சிகிச்சை பெற்றுவந்த 56 நோயாளிகள் வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றம் செய்யப்பட்டனர். மேலும், இறந்து போனவர்களின் உறவினர்கள் மியாட்டின் வாசலில் குவிவதைத் தடுக்கும் உள்நோக்கத்தோடு அந்த 18 நோயாளிகளின் சடலங்கள் ராயப்பேட்டை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டன.

ஒருவரின் அலட்சியம் காரணமாக நேரும் மரணத்தை கொலைக் குற்றமாகாத மரணம் என வகைப்படுத்துகிறது, கிரிமினல் சட்டம். ஆனால், மியாட்டில் நடந்த சாவுகளின் தன்மையே வேறு. பிணியிலிருந்தும், நோயிலிருந்தும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள மியாட் மருத்துவமனையை நாடிவந்த நோயாளிகளைத் தனது குற்றமுறு அலட்சியம் காரணமாகத் தெரிந்தே சாவிற்குள் தள்ளியிருப்பதால், மியாட் முதலாளி மோகன்தாஸ் குடும்பத்தைக் கொலை குற்றத்தின் கீழ் கைது செய்திருக்க வேண்டும். ஆனால், அவரோ வெளியில் இருந்துகொண்டு, "இறந்து போனவர்கள் மருத்துவமனையில் ஆக்ஸிஜன் கிடைக்காததால் இறந்து போகவில்லை. அவர்கள் வெவ்வேறு நாட்களில் வெவ்வேறு காரணங்களால் இறந்து போனவர்கள்" என அறிக்கை விடுகிறார். தமிழக அரசின் சுகாதாரத் துறையும் இதனை வழிமொழிந்து, குற்றவாளிக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறது.

குற்றவாளியும் அரசும் கூட்டுக் களவாணியாகச் சேர்ந்துகொண்டு உண்மையைக் குழிதோண்டிப் புதைத்துவிட முயலுவதால், சமூக ஆர்வலர் டிராபிக் ராமசாமி இந்தச் சாவுகளுக்கு காரணமானவர்களை கொலைக் குற்றமாகாத மரணம் என்ற குற்றப்பிரிவின் கீழ் தண்டிக்கக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். மேலும், ஏரியிலும் நீர்வழிப் பாதையிலும் இம்மருத்துவமனையைக் கட்டுவதற்கு அனுமதி அளித்த அரசு அதிகாரிகளையும் தண்டிக்க வேண்டும் என்றும் கோரியிருக்கிறார்.

இந்த வழக்கு ஒரு மோகன்தாஸுக்கு எதிராகத்தான் தொடரப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகமெங்கும் பல மோகன்தாஸுகள் நோயாளிகளின் உயிரோடு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மழையின் போது சென்னையிலுள்ள மற்றொரு கார்ப்பரேட் மருத்துவமனையான குளோபல் மருத்துவமனையிலும் வெள்ளம் புகுந்து, அங்கிருந்த நோயாளிகள்

அனைவரும் நல்வாய்ப்பாக உயிர் பிழைத் தனர். பெரும்பாக்கம் ஏரியை ஆக்கிரமித்து இந்த மருத்துவமனையைக் கட்டிவிட்டு, பெருமழையின் மீது பழிபோட்டுக் கொண் டிருக்கிறது, அந்நிர்வாகம்.


பெரும்பாக்கம் ஏரிப் பகுதியில் கட்டப்பட்ட குளோபல் மருத்துவமனை யின் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கூடம் வெள்ளத்தில் மூழ்கியது.

இந்த நிலையில் வெள்ளம், திடீர் தீ விபத்து, பூகம்பம் போன்ற பேரிடர்கள் ஏற்படும் வேளையில், அவற்றைச் சமாளித்து நோயாளிகளைக் காப்பாற்றும் விதத்தில் இந்தியாவில் எந்தவொரு மருத்துவமனையும் - அரசு மருத்து வமனைகளும்தான் - கட்டப்படவில்லை என்ற அதிர்ச்சிகரமான தகவலை சென்னை வெள்ளத்திற்குப் பிறகு வெளியிட்டிருக் கிறார், பேரிடர் மேலாண்மை நிபுணரான கவிதா நாராயணன்.

பேரிடர் மேலாண்மை குறித்து அமெரிக்காவில் பயிற்சி பெற்ற இவரும், சில மருத்துவர்களும், மருத்துவமனை கட்டிட வல்லுநர்களும் இணைந்து, ஒரு பேரிடர் ஏற்படும்பொழுது மருத்துவர்களும், ஊழியர்களும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற அறிக்கையைத் தயார் செய்து கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பே அரசிடம் அளித்துள் ளனர். அந்த அறிக்கையில், "ஒரு பேரிடர் ஏற்படும் வேளையில் மருத்துவர்களும், ஊழியர்களும், நிர்வாகமும் இணைந்து நோயாளிகளை எப்படி வெளியேற்ற வேண்டும், எந்தெந்த மருத்துவ உபகரணங்களை மருத்துவமனையின் எந்தெந்த பகுதிகளில் நிறுவியிருக்க வேண்டும், தீ விபத்து ஏற்பட்டால் அதனை எப்படி சமாளிக்க வேண்டும், தீவிர சிகிச்சை பிரிவில் வெள்ளம் புகாமல் தடுப்பது எப்படி" என்பது உள்ளிட்ட பல்வேறு காப்பு நட வடிக்கைகள் குறித்து விளக்கப்பட்டிருக்கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மேற்கு வங்க மாநிலத் தலைநகர் கொல்கத்தாவிலுள்ள ஆம்ரி மருத்துவமனையில் தீ விபத்து ஏற்பட்டு 90-க்கும் அதிகமான நோயாளிகள் இறந்துபோன வேளையில், கவிதா நாராயணன் இந்த அறிக்கையைத் தயார் செய்து அரசிடம் அளித்திருக்கிறார். ஆனால், அவர்களது பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சட்டம், விதிமுறைகளை வகுக்காமல், அந்த அறிக்கையை எலி தின்ன விட்டிருக்கிறது அரசு என அம்பலத்துகிறது, இந்து நாளிதழ். (இந்து, டிச.16)

இதுவொருபுறமிருக்க, மருத்துவமனைகளின் தரம் மற்றும் சேவை ஆகியவற்றை ஒழுங்குபடுத்து வதற்காக மருத்துவமனைகள் பதிவு மற்றும் ஒழுங்கு படுத்தும் சட்டத்தை 2010-இல் நிறைவேற்றியது, மைய அரசு. இந்தச் சட்டத்தை மிகச்சிறிய மாநிலங்களாக அருணாச்சல பிரதேசம், சிக்கிம், மிசோராம், இமாச்சல பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களைத் தவிர்த்து வேறெந்த மாநிலமும் அமல்படுத்த முன்வரவேயில்லை. குறிப்பாக, தமிழ்நாடு அரசு, தம்மிடம் ஏற்கெனவே அது போன்றதொரு மாநிலச் சட்டம் இருப்பதாகக் கூறி, மைய சட்டத்தை கடாசிவிட்டது. அம்மாநிலச் சட்டம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டாலும், நடைமுறைப்படுத்தும் விதத்தில் அரசிதழில் வெளியிடப்படவில்லை எனத் தமிழக அரசின் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்துகிறார், மைய அரசின் சட்டத்தை வடிவமைத்த குழுவில் இடம் பெற்ற சுனில் நந்தராஜ்.

"இம்மாநிலச் சட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு ஏற்ற விதிமுறைகளை வடிவமைக்க சம்பந்தப்பட்டவர்களிடம் பேசிக் கொண்டிருக் கிறோம்" என ஒரு நொண்டிச்சாக்கை கூறியிருக்கிறார், சுகாதாரத் துறை செயலர். கார்ப்பரேட் மருத்துவமனை முதலாளிகள்தான் இந்த சம்பந்தப்பட்டவர்கள். திருட்டை ஒழிக்க திருடனே ஆலோசனை கேட்கும் அயோக்கியத்தனத்திற்கு ஒப்பானது இது.

தமிழகத்தில் 40 சதவீத உள்நோயாளிகளும், 60 சதவீத புறநோயாளிகளும் தனியார் மருத்து வமனைகளில்தான் சிகிச்சை எடுத்துக் கொள்வதாக சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இது அரசு மருத்துவமனைகள் இரண்டாம்பட்ச நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதன் அறிகுறி.

இப்படிபட்ட நிலையில் தனியார் மருத்துவ மனைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் கண்காணிப் பதற்கும் குறிப்பிடத்தக்க விதிமுறைகளும், சட்டங் களும் இல்லை என்பது எத்தகையதொரு சாபக் கேடு. கார்ப்பரேட் மருத்துவமனைகள் தாம் விரும்பியபடி சிகிச்சை அளிக்கலாம், கட்டணம் வசூலிக்கலாம், உயிரிழப்பு நேரிடும்பொழுது தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாம், அவர்களைத் தண்டிக்க வழியேதும் கிடையாது என்பது அரசின் கையாலாகத்தனம் மட்டுமல்ல. தனியார்மயம் என்ற கட்டமைப்பின் அபாயமும் இதுதான்.

• ரஹீம்

# தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம்:

# 59-வது கருக்கரிவாள்!

**செ**ன்னையில் ஏறத்தாழ 4 நாட்கள் வெள்ளத்தில் மக்கள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த போது, தன்னார்வலர்கள் களத்தில் இறங்கி மீட்புப் பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டதோடு, வாட்ஸ்-அப் மூலம் தமக்குள் ஒருங்கிணைத்துக் கொண்டு இயங்கினர். சில பண்பலை வானொலி நிலையங்கள் எந்தெந்தப் பகுதிகளில் அவசர உதவி தேவைப்படுகிறது என்ற தகவலை உடனுக்குடன் தெரிவித்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு உதவின. ஆனால், இத்தகைய பேரழிவுகளை எதிர்கொண்டு மக்களையும் உடைமைகளையும் மீட்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் அந்த இக்கட்டான தருணத்தில் ஏதோ உப்புக்குச் சப்பாணியைப் போல இயங்கியது.



மீட்புப் பணியில் ஈடுபட்டதாகக் காட்டிக்கொண்ட தேசியப் பேரிடர் மீட்புப் படை.

இயற்கைப் பேரழிவுகள் முதல் உயிரியல், இரசாயன, அணுக்கதிரியக்கம் முதலான எல்லா வகைப் பேரழிவுகளையும் எதிர்கொண்டு சமாளிப்பதற்கென்றே தேசியப் பேரிடம் மேலாண்மை ஆணையம் உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இராணுவம், போலீசு, தீயணைப்புத்துறை முதலானவற்றை உடனடியாக அழைத்து ஒருங்கிணைத்து இயக்குவதில் உள்ள சிக்கல்களின் காரணமாகவும், பொதுமக்கள் பதட்டத்தோடு மீட்பு நடவடிக்கைகளில் இறங்கி ஆபத்தில் சிக்கிக் கொள்வதைத் தவிர்த்து, முறையாகவும் பாதுகாப்பாகவும் மக்களையும்உடைமைகளையும்மீட்கவும்,நிவாரணப் பணிகளைச் செய்யவும் இந்த ஆணையத்தைத் தனிச்சிறப்பாக உருவாக்கியிருப்பதாக ஆளும் கும்பல் தம்பட்டம் அடித்து வருகிறது.

இந்த ஆணையத்தின் கீழ் பயிற்சி பெற்ற வீரர்களைக் கொண்ட மீட்புப் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. ஆனால், சென்னை - நந்தம்பாக்கம் அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில், வெள்ளத்தில் தத்தளித்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணை படகில் சென்று மீட்கக்கூட இப்பேரிடர் மீட்புப் படையால் முடியவில்லை. பின்னர், இராணுவ ஹெலிகாப்டர் மூலமாகத்தான் அப்பெண் மீட்கப்பட்டுள்ளார். ஏன் இந்த ஆணையத்தின் மீட்புப் படையிடம் ஹெலிகாப்டர் இல்லை, ஏன் வெள்ள நிலைமை பற்றிய அறிவிப்பையோ, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கான ஒருங்கிணைப்பையோ செய்யவில்லை என்று கேட்டால் எதற்கும் பதிலில்லை.

கடந்த ஆகஸ்டு 1999- இல் ஒரிசாவைப் புயல் தாக்கியபோது, இப்படியொரு தனிச்சிறப்பான ஆணையத்தை உருவாக்க வேண்டுமென ஒரு நிபுணர் குழுவை அமைத்து அதன் பரிந்துரைகளை மைய அரசு கோரியது. அந்த அதிகாரவர்க்கக் குழு ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் கூடி, இது பற்றி பேசிக் கொண்டு வரிப்பணத்தை விழுங்கிக் கொண்டிருந்ததேயன்றி, எதையும் முன்வைக்கவில்லை. இதற்கிடையே, 2001-இல் குஜராத்தில் நிலநடுக்கம், 2004-இல் சுனாமி - ஆகிய பேரழிவுகள் தாக்கின. அதன் பின்னர், மிகவும் சாவகாசமாக 2005-இல் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த மைய ஆணையத்தின் கீழ், மாநில அளவிலான பேரிடர் மேலாண்மை ஆணையமும் மீட்புப் படையும் ஏற்படுத்த வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டாலும், அது இன்னமும் காகிதத்தில்தான் இருக்கிறது. மேலும், எந்தெந்தப் பகுதிகளில் பேரிடர் அபாயம் ஏற்படும், அங்கு எத்தகைய முறையில் பணியாற்ற வேண்டும் என்பது பற்றியோ திட்டமோ, அற்கான பயிற்சியோ, பேரிடர்களை எதிர்கொள்வதற்கான சாதனங்களோ, பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களோ, ஒருங்கிணைப்போ இந்த அமைப்பிடம் இதுவரை இல்லை.

தமிழகத்தைத் தாக்கிய "தானே" புயல், அதன் பிறகு டெல்லியில் ஏற்பட்ட நிலநடுக்கம், குஜராத்தைத் தாக்கிய புயல், தற்போதைய சென்னை வெள்ளம் - முதலான பேரிடர்களின்போது இந்த ஆணையமோ, அதன் மீட்புப் படைகளோ முன்நின்று எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. பேரிடர் மேலாண்மை ஆணையம் என்ற எவ்விதப் பொறுப்புணர்வோ கடமையுணர்வோ இல்லாத, வேலைக்கு ஆகாத ஒரு அமைப்புதான் நாட்டில் இருக்கிறது. அது, நமது வரிப் பணத்தைத் தின்று தீர்க்கும் கோட்டு சூட்டு போட்ட அதிகார வர்க்க வெட்டிப் பயல்களின் கூட்டமாகத்தான் இருக்கிறது.

• குமார்

# வெள்ளத்தில் மூழ்கிய விவசாயம், சிறுதொழில்:

# வேடிக்கை பார்க்கிறது அரசு!

**ஏறத்தாழ ஒரு கோடி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் மறுவாழ்வுக்கு எந்தப் பதிலும் கூறாமல் மைய-மாநில அரசுகள் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருகின்றன.**

**சென்**னையைத் தாக்கிய பெருமழை - வெள்ளப் பேரழிவிலிருந்து இப்பெருநகரம் மெதுவாக மீண்டெழுந்து வருவதாக ஊடகங்கள் சித்தரிக்கின்றன. ஆனால், சென்னை மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களிலுள்ள சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் விவசாயமும் இப்பேரழிவிலிருந்து மீள வழிதெரியாமல் இன்னமும் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இயந்திரங்களின் ஒலி எப்போதும் காதில் மோதிக்கொண்டிருக்கும் அம்பத்தூர் - பாடி, வில்லிவாக்கம் சிட்கோ, கிண்டி - ஈக்காடு தாங்கல், அத்திப்பட்டு, அயப்பாக்கம், காக்களூர், மறைமலை நகர், திருமுடிவாக்கம், திருவொற்றியூர், மணலி முதலான பகுதிகளில் உள்ள தொழிற்பேட்டைகள் இன்னமும் செயலற்று முடங்கிக் கிடக்கின்றன. அங்கு வேலை பார்த்து வந்த தொழிலாளர்கள் நிலைமையோ பரிதாபகரமானது. சிறு தொழிற்கூடங்கள் திறப்பதற்குத் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் அவர்கள் வருமானமின்றி, குடும்பத்தைப் பராமரிக்க வழியின்றித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். வேலை இல்லாததால், வெளிமாநிலங்களைச் சேர்ந்த பல தொழிலாளர்கள் தங்களது சொந்த ஊருக்குச் சென்று விட்டனர்.

இலட்சக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பளித்து தொழில் துறையின் இயக்கத்துக்கு முதுகெலும்பாக இருப்பது இத்தகைய சிறு, குறு தொழில் நிறுவனங்கள்தான். இந்நிறுவனங்கள் உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்து கொடுக்கவில்லை என்றால், பெருந்தொழில் நிறுவனங்களால் ஒரு நிமிடம்கூட இயங்க முடியாது. ஆனால், சென்னை மற்றும் மூன்று மாவட்டங்களிலுமுள்ள சிறு - குறுந்தொழில் துறையானது, வெள்ளப் பாதிப்பினாலும், அரசின் புறக்கணிப்பாலும் மவுனமாக மரணத்தை எதிர்கொண்டிருக்கிறது.

சென்னை - வில்லிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையானது, முதற்கட்ட மழையிலேயே வெள்ளத்தில் மூழ்கியது. அடுத்து, தமிழகத்தின் மிகப்பெரிய தொழிற்பேட்டையான சென்னை-கிண்டி தொழிற்பேட்டையானது, அடையாறு ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் 8 அடி உயரத்துக்குத் தண்ணீரில் மூழ்கியது. இப்பகுதியில்உள்ள சிறு, குறுந்தொழில் முனைவோர் தனியாரிடம் கடன் வாங்கி, பத்துக்குப் பத்து அடி கொண்டுள்ள வாடகை இடத்தில் ஒரு இயந்திரத்தையும் ஓரிரு தொழிலாளர்களையும் வைத்துக் கொண்டு தொழில் செய்யும் சாதாரணமானவர்கள்தான். கிடைக்கும் வருவாயில் தொழிலாளர்களுக்குக் கூலியும் மின் கட்டணம், தவணைக் கடன் திருப்பிச் செலுத்துவது முதலானவை போக அற்ப வருவாயுடன் வீடு திரும்புபவர்கள்தான். இவர்கள் தங்கள் தொழிலைப் பாதுகாக்க இன்சூரன்ஸ்கூட எடுப்பதில்லை. மின்சாரம் முறையாகக் கிடைக்காமல், தொழிலை நடத்தப் பயன்படுத்தி வந்த ஜெனரேட்டர்களும் இப்போது வெள்ளத்தில் நாசமாகிவிட்ட நிலையில், இனி எப்படி தொழில் செய்வது என்று புரியாமல் இவர்கள் தவிக்கிறார்கள்.

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டைக்குள் மூக்கைப் பொத்திக் கொண்டுதான் இன்னமும் செல்ல வேண்டியிருக்கிறது. கழிவு நீரை சிறு, குறு தொழில் நிறுவன முனைவர்கள்தான் தங்கள் சொந்தக் காசைப் போட்டு வெளியேற்றிக் கொண்டிருக்கின்றனர். அம்பத்தூரிலுள்ள பல சிறு தொழில் நிறுவனங்களில் வெள்ளம் காரணமாக தண்ணீர் புகுந்து இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள், ஜெனரேட்டர், உற்பத்தியான பொருட்கள் அனைத்தும் சேதமடைந்து, ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய்க்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தொழில் முனைவோர் கூறுகின்றனர்.

தாராளமய - உலகமயமாக்கத்தால் சிறு - குறுந்தொழில்துறை ஏற்கெனவே நசிந்து போய் ஆட்சியாளர்களால் கைவிடப்பட்டுள்ள நிலையில், கடும் மின்சாரத் தட்டுப்பாட்டின் ஊடாக மிகுந்த இடர்ப்பாடுகளுடன் தொழிலை நடத்திவரும் இத்தொழில் முனைவோரை, தற்போதைய வெள்ளப் பேரழிவு நிலைகுலைய வைத்துள்ளது. அரசுதான்

இத்தொழிற்பேட்டைகளில் தொழில் தொடங்க சிறு - குறுந்தொழில் முனைவர்களை அழைத்தது. ஆனால், இத்தொழிற்பேட்டைகள் வெள்ளத்தில் மூழ்கி, தொழில் முனைவோருக்குப் பல்லாயிரம் கோடிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு என்னதான் பதில் என்று கேட்டால், நாங்கள் என்ன செய்ய முடியும்? இது இயற்கையின் சீற்றம் என்று நழுவிக் கொள்கிறது ஜெ.அரசு. ஆனால், இது இயற்கையின் சீற்றமல்ல; ஆட்சியாளர்களாலும் ஆக்கிரமிப்பாளர்களாலும் ஏற்படுத்தப்பட்ட பேரழிவு.



இனி மீண்டெழ முடியுமா?: வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட சென்னை-அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள சிறுதொழில் நிறுவனம்.

அம்பத்தூர் ஏரியைத் தூர்த்துதான் பல அரசு அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன. அம்பத்தூர் ஏரியிலிருந்து தொழிற்பேட்டை வழியாக கொரட்டூர் ஏரிக்குச் செல்லும் வெள்ளநீர் போகும் கால்வாய்கள் சேதமடைந்து கிடப்பதால், வெள்ளநீர் வெளியேற முடியாமல் தொழிற்பேட்டைக்குள் புகுந்து விட்டது. தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஏற்கெனவே இருந்த சாலைகளை ஒரு மீட்டருக்கும் அதிகமான உயரத்தில் அமைத்ததால், ஏற்கெனவே கட்டிடங்கள் பள்ளத்துக்குப் போனதன் காரணமாக தொழிற்பேட்டையே வெள்ளக்காடாக மாறிப்போனது.

தமிழக மற்றும் மத்திய அமைச்சர்கள் இத்தொழிற்பேட்டைகளை வந்து பார்த்துவிட்டு மனதுக்குச் சங்கடமாக இருக்கிறது என்று ஆறுதல் கூறினார்களேயன்றி, மரணக்குழியில் வீழ்ந்துவிட்ட இத்தொழில்களை மீட்க எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நட்டமாகியுள்ள கம்பெனிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி, ஈ.எஸ்.ஐ., பி.எஃப், கலால் வரி, மின்கட்டணம் ஆகியவற்றில் சலுகையும், சிறு-குறுந் தொழில்களுக்கு 10 லட்ச ரூபாய் வரை கடன் தள்ளுபடியும், சுலபத் தவணையில் கடனும் வழங்க வேண்டும் என்கிறார்கள் சிறுதொழில் முனைவர்கள். ஆனால், இது பற்றிய முடிவு எதையும் இதுவரை அரசு அறிவிக்கவில்லை.

சிறுதொழில்கள் மட்டுமின்றி, தாவர நார்பட்டுச் சேலைகள் தயாரிப்பதில் பிரபலமான சென்னை - அனகாபுத்தூர் கைத்தறி நெசவாளர்களும், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி லுங்கி நெசவாளர்களும் தமது வாழ்வாதாரத்தை இழந்து பரிதவிக்கின்றனர். சிறு கடைகள், நடைபாதைக் கடைகள், ஆட்டோ, கால் டாக்சிகளை வைத்து பிழைப்பு நடத்துவோர், கட்டுமானத் தொழிலும் தொழிலாளர்களும் - என இந்தப் பாதிப்பு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக இருக்கிறது. கடைகள் மற்றும் சிறு தொழில்களுக்குச் சங்கம் இருப்பதால் பாதிப்பு எவ்வளவு என்று உத்தேசமாகவாவது தெரிகிறது. சிறு வியாபாரிகள், நடைபாதை வியாபாரிகள், தள்ளு வண்டிக் காரர்கள் முதலானோருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு பற்றி இன்னும் விவரம் தெரியவில்லை.

கடலூர், விழுப்புரம் மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் ஆற்று மணற்கொள்ளையர்கள் ஆளும் கட்சி கிரிமினல்களோடு சேர்ந்து ஆறுகளை சிதைத்தும், மடைமாற்றியும் விட்டுள்ளதாலும், பல ஆறுகளில் தூர்வாரப்படாததாலும் விவசாய விளைநிலங்கள் வெள்ளக்காடாகி, வயல் வெளிகளில் மணல் மூடி விவசாயிகளின் வாழ்வாதாரமே பறிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், மீனவர்கள், சிறு வணிகர்கள், பிற உழைக்கும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் உடைமை இழப்பு ரூ. 2,000 கோடிக்கும் மேலாகும் என்று கூறப்படுகிறது.

தமிழகத்தில் இலட்சக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் முக்கியமான அமைப்பு சாரா துறையாக இருப்பவை விவசாயமும், சிறு தொழில்களும்தான். சென்னை மற்றும் பிற மூன்று மாவட்டங்களிலும் இத்துறைகளைச் சார்ந்துள்ள ஏறத்தாழ ஒரு கோடி மக்களின் வாழ்வாதாரத்தைப் பறித்துவிட்டு, அவர்களின் மறுவாழ்வுக்கு எந்த பதிலும் கூறாமல் மத்திய - மாநில அரசுகள் தொடர்ந்து அலட்சியப்படுத்தி வருகின்றன. தமக்கு விதிக்கப்பட்ட கடமையையும், பொறுப்பையும் ஆற்றத் தவறி, அதற்கு நேர் எதிரான திசையில் மத்திய - மாநில அரசுகள் செயல்பட்டு வருவதையே இவை மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

• மனோகரன்

# சென்னையின் அழிவில் நீதிபதிகளின் பங்கு!

**ஆறுகளும் ஏரிகளும் ஆக்கிரமிக்கப்பட்டதற்குக் காரணமானவர்கள் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்தான் என்றும், நீதிமன்றங்கள்தான் இவற்றைப் போற்றிப் பாதுகாப்பதாகவும் உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக்கருத்து பொய்யானது.**

2015-ஆம் ஆண்டின் மிகப்பெரும் பேரழிவுகளில் ஒன்றான சென்னையின் பெருவெள்ளம் குறித்து பலரும் பல காரணங்களைக் கூறி வருகிறார்கள். இந்தச் சூழலில், பலரும் பார்க்க மறந்த பூதம் ஒன்றும் உள்ளது. அதுதான் நீதிமன்றங்கள், சென்னை உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும்; ஏரிகளைக் கூண்டோடு அழிக்கும் கொடுமைகளைத் தீர்ப்பாக அள்ளி வழங்கிய நீதி அரசர்களையும் இதுவரையில் யாரும் குறை சொல்லவில்லை. மும்பையில் இருந்து வெளிவரும் எகனாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி (EPW) என்ற இதழ் மட்டுமே நீதிமன்றங்களின் பங்கையும் குறிப்பிட்டு ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது. அதனை எழுதிய ஆசிரியர்களின் கூற்றுப்படி சென்னையின் ஆறுகள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளை சேதம் செய்ததில் ஒருவகையில் "நீதிமன்றங்களும் நேரடியாகப் பங்கெடுத்துள்ளன". தங்களை நீதியின் அரசர்களாகவும், சட்டங்களைக் கரைத்துக் குடித்ததாகக் காட்டிக் கொள்ளும் இந்தக் கோமான்கள் சென்னைக்கு இழைத்த கொடுமைகளை இந்தக் கட்டுரையில் பார்க்கலாம். அதற்கு முன்பாக, சென்னையைப் பற்றிய சிறிய விசயங்கள் சிலவற்றைத் தெரிந்து கொள்வது உதவியாக இருக்கும்.

## சென்னை நகரின் அமைவிடமும் நீர்நிலைகளும்

இன்று நாம் காணும் சென்னை நகரம், "இயற்கையை மனிதமாக்கும் (humanizing nature)" மாபெரும் மனித முயற்சிகளின் ஒரு தொகுப்பு. மிகச் சுருக்கமாகச் சொன்னால்,

1. இன்றைய சென்னை நகரம் என்பது நூற்றுக்கும் மேற்பட்ட நஞ்சை விவசாயம் (நெல் விவசாயம்) செய்து வந்த பாசனக் கிராமங்களை உள்ளடக்கிய ஒரு தொகுதி. எனவே, அதிகமான நீர் வருவது ஒன்றும் புதுமையல்ல. நெல் வயல்களில் சில மணி நேரங்களில் நீர் வடிந்து வெளியேறுவது போல நகரில் வெள்ளம் வந்தாலும், அது உடனடியாக வடிய வேண்டும். எனவே, சென்னையின் நில அமைப்பை யாரேனும் குறை சொன்னால் அது அவரது மடமை.

2. சென்னை நகரின் பகுதிகளில் அமைந்திருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏரிகள்,


பக்கிங்காம் கால்வாயை ஆக்கிரமித்து ஓடும் சென்னையின் பறக்கும் ரயில்.


1959-இல் பக்கிங்காம் கால்வாய்.

> **பக்கிங்காம் கால்வாய், விஜயவாடா நகரம் தொடங்கி மரக்காணம் வரை சென்று சேரும் 700 கி.மீ. நீள போக்குவரத்துக் கால்வாய். பெரிய படகுகள் முதல் சிறு கப்பல்கள் வரை குறைந்த செலவில் பயணம் செய்வதற்கென்று உருவாக்கப்பட்ட நீர் வழித்தடம். இது போன்றதொரு மிகப் பெரும் முன்முயற்சி இந்தியாவில் வேறு எங்கும் இல்லை.**

அதனைவிட அதிகமான கோயில் குளங்கள், குட்டைகள் அனைத்தும் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்களின் உழைப்பில் உருவாக்கிய செயற்கையான கட்டமைப்புகள். அனைத்துக்கும் அடிப்படை அறிவியல் மட்டுமே.

3. இந்த மண்ணின் மைந்தர்கள் செயற்கையான ஏரிகளுக்கு நீரைக் கொண்டு வருவதற்கென கணக்கில்லாத கால்வாய்களையும் கூடவே உருவாக்கியிருந்தார்கள். தற்போதைய கால்வாய்கள் நீரைக் கொண்டு வரவும் வெளியேற்றவும் உருவாக்கப்பட்டவை. எனவே, கால்வாய்களை அழித்துவிட்டால், அல்லது அதன் அகலத்தை குறைத்தால் வெள்ளம் உறுதியாக வரும். வெள்ளம் என்பது வழமையைவிட அதிகமாகப் பொங்கி ஓடும் நீரே. எனவே, வழிவகையில்லாத நீர் தன் வழியைத் தேர்வு செய்து கொள்ளும் என்பது நீரியல் விதி.

4. சென்னையை குறுக்கிட்டு ஓடும் நான்கு ஆறுகள் - கொற்றலை, ஆரணி, கூவம், அடையாறு - இயற்கையின் படைப்புகளே. என்றாலும், இவை ஏரிகளுடன் இணைக்கப்பட வேண்டியிருந்ததால் மனிதர்களின் தேவையறிந்து செயல்படும் வண்ணம் பயிற்றுவிக்கப்பட்டவை (River Training). இதன் காரணமாகவே, அதன் கரைகள் பல இடங்களில் உயர்த்தப்பட்டும, சில இடங்களில் விரிக்கப்பட்டும், பல இடங்களில் தடுப்புகள் கட்டப்பட்டும் உள்ளன. இதற்கும் அறிவியல் அடிப்படைகள் உண்டு.

5. ஆந்திரம் தொடங்கி சென்னையைக் கடந்து மரக்காணம் வரை செல்லும் பக்கிங்காம் கால்வாய் நான்கு ஆறுகளையும், பல கால்வாய்களையும் இணைக்கிறது. நகருக்குள் பெய்யும் மழை மட்டுமின்றி பல நூறு ஏரிகளிலிருந்து வடியும உபரி நீரையும் மிக விரைவில் வெளியில் கொண்டு சேர்க்கும் வண்ணம் இந்தக் கால்வாய் உருவாக்கப்பட்டது. இந்தக் கால்வாயும் மனிதர்கள் உருவாக்கியதே.

இங்குள்ள மக்கள் இயற்கையின் தயவில் மட்டும் வாழ்ந்து வரவில்லை. தமது உழைப்பினால் காலத்தை வென்ற ஏரி-குளங்கள் கொண்ட ஒரு கட்டமைப்பைப் படைத்து, அதன் நடுவே வாழ்ந்து வந்தனர். இத்தகைய மாண்புறு மனித முயற்சிகளைச் சிதைத்ததில் நமது நீதியரசர்களுக்கும் அவர்கள் கோலோச்சும் நீதிமன்றங்களுக்கும் உள்ள பங்கு பற்றி அறிய மூன்று வழக்குகளை மட்டும் இங்கே விவரிக்கலாம்.

### பக்கிங்காம் கால்வாய் வழக்கு

இன்றைய தலைமுறையினர் பக்கிங்காம் கால்வாய் என்றால் நாற்றமடிக்கும் சாக்கடை என்றுதான் அறிந்திருப்பார்கள். ஆனால், அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மகத்தான அறிவியல் சாதனை என்பது பலர் அறியாத உண்மை. இந்தக் கால்வாய் அன்றைய சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த ஆந்திரத்தின் விஜயவாடா நகரம் தொடங்கி தமிழகத்தின் மரக்காணம் வரை சென்று சேரும் ஒரு போக்குவரத்துக் கால்வாய். அடிக்கடி புயல்களுக்கு உள்ளாகும் வங்கக் கடலை நம்பி பொருட்களை கொண்டு சேர்ப்பதைவிட, உள்நாட்டு வாய்க்கால்கள் பல மடங்கு பாதுகாப்பானவை. மேலும், சாலை, ரயில், விமானப் போக்குவரத்தைவிட நீர்ப்போக்குவரத்துக்கு ஆகும் செலவு மிகக் குறைவு. பெரிய படகுகள் முதல் சிறு கப்பல்கள் வரை குறைந்த செலவில் பயணம் செய்வதற்கென்று உருவாக்கப்பட்ட நீர் வழித்தடம் இது. கால்வாயின் நீளம் சுமார் எழுநூறு கிலோ மீட்டர், சென்னை நகருக்குள் இதன் அகலம் சுமார் இருபத்தைந்து மீட்டர். இது தவிர்த்து கால்வாயின் கரைகள் மிகவும் அகலமானவை. வேண்டுமானால் எதிர்காலத்தில் கால்வாயை அகலப்படுத்தத் தகுந்தவை.

வட இந்தியாவில் ஆண்டுதோறும் நீரோடும் கங்கை, யமுனை, பத்மா போன்ற வற்றாத ஜீவ



1961-இல் பக்கிங்காம் கால்வாய்.

**2006-இல் தரப்பட்ட தீர்ப்பின் பலனாக, கால்வாயின் அகலம் பாதிக்கும் குறைவாகி பத்து மீட்டருக்கு வந்தது.**

**குடிசைகள் அகற்றப்பட்டன. ஆனால், வெள்ளம் நிற்கவில்லை.**

**பல்லாயிரம் மக்கள் உழைப்பில் உருவான கால்வாய்க்கு நிரந்தரச் சாவு இந்த தீர்ப்பினால் விதிக்கப்பட்டது.**

நதிகளின் நீரைப் பெறும் வண்ணம் பெரிய கால்வாய்கள் வெட்டப்பட்டுள்ளன. ஆனால், பக்கிங்காம் கால்வாய் அவற்றிலிருந்து பெரிதும் வேறுபட்டது. ஆண்டுக்கு சில நாட்கள் மட்டுமே பெய்யும் மழையிலிருந்து நீர் பெறும் தென்னிந்திய நதிகளை இணைத்து உருவாக்கப்பட்டது இது. ஆண்டு முழுதும் செயல்படுவதற்கு ஏதுவாக இக்கால்வாய் பல ஓடைகள், ஆறுகள், ஏரிப் பாசனக் கழிவோடைகளுடன் இணைக்கப்பட்டிருந்தன. நாம் அறிந்தவரையில், இது போன்றதொரு மிகப் பெரும் முன்முயற்சி இந்தியாவில் வேறு எங்கும் இல்லை என்றே சொல்லலாம்.

செயல்படத் தொடங்கி ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது, 1960-ஆம் ஆண்டுகளில் சென்னை நகருக்குட்பட்ட பகுதிகளில் இந்தக் கால்வாய் போக்குவரத்து நின்று போனது. சாக்கடைகளைக் கலப்பது, குப்பைகளைக் கொட்டுவது, ஆக்கிரமித்து வீடுகள் கட்டுவது தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தது. இப்படி பல காரணங்களால், இந்தக் கால்வாயின் பல பகுதிகள் சிறுகச்சிறுக செயல் இழந்து வந்தன. என்றாலும், கால்வாய் முற்றிலும் செயல் இழந்து விட்டதாகக் கூறி விட முடியாது. சென்னைக்குள் வடியும் வெள்ளத்தை தணிக்கும் பணியை இது செய்து கொண்டிருந்தது. இந்திய அரசும் அவ்வப்போது செலவு குறைவான நீர் வழித் தடங்களை நாடு முழுதும் உருவாக்க விரும்பி ஏதாவது அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டே இருந்தபடியால், பக்கிங்காம் கால்வாய் முழுதும் சேதம் அடைந்து விடாமல் பாதுகாக்கப்பட்டு வந்தது. என்றோ ஒரு நாள் இந்தக் கால்வாய் மீண்டும் பயனுக்கு வரும் என்ற எண்ணத்தில் பலரும் இருந்த வேளையில், அதன் நாசத்தை தமிழக அரசும் ரயில்வே துறையும் தொடங்கின.

### பறக்கும் ரயில்

பக்கிங்காம் கால்வாயை மேவி மேடிட்டு, அதன் மேல் பறக்கும் ரயில் (MRTS) என்று தற்போது அழைக்கப்படும் சென்னை உள்ளூர் ரயில் தடம் ஒன்றை உருவாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. அதன் பணிகள் பல கட்டங்களாக நடந்து வந்த காலகட்டத்தில், 1996-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஒரு பெரு மழை பெய்தது. அப்போது, பக்கிங்காம் கால்வாய் செல்லும் வழி எங்கும் பெரும் வெள்ளம் பொங்கிப் பாய்ந்து பெரும் பொருட் சேதத்தை விளைவித்தது. கால்வாயின் நடுவில் கட்டப்பட்டு வந்த தூண்களும், ரயில் நிலையங்களும் நீர் செல்லும் வழியை மறித்துக் கொண்டிருந்ததால், இந்த வெள்ளம் ஏற்பட்டதாகப் பலரும் கருதினர்.

அதே ஆண்டில், எக்ஸ்னோரா இன்டர்நேசனல் (Exnora International) என்ற தன்னார்வ நிறுவனம் இத்தகைய வெள்ளத்திற்கு ரயில்வேயின் வேலைகள் காரணம் என்று குற்றம் சாட்டி பொதுநல வழக்கு ஒன்றை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்தது. சட்டத்தை அரசு நிலைநாட்டத் தவறும் பட்சத்தில் குடிமக்கள் நீதி மன்றங்களை நாடி 'சட்டத்தின் ஆட்சியை' நிலை நாட்டச் செய்யலாம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் இந்தப் பொது நல வழக்கு ஏற்கப்பட்டது. எக்ஸ்னோரா தனக்கு ஆதரவாக மூன்று முக்கியமான காரணங்களைப் பல

சென்னை வெகு வேகமாக நகரமயமாகி வருவதால் பள்ளிக்கரணை போன்ற சதுப்பு நிலங்களையும் ஏரிகளையும் காப்பாற்ற முடியாது என்றது அரசு.

இதை ஏற்றுக் கோண்ட நீதிபதிகள், பறக்கும் ரயில் போன்ற பல திட்டங்களை உருவாக்கினால்தான் உலக அரங்கில் இந்தியா தலை நிமிர்ந்து நடக்குமென்று தீர்ப்பில் கூறினார்கள்.



ஆதாரங்கள் மற்றும் விவரங்களுடன் சமர்ப்பித்தது. ஒரு வகையில் சொல்வதானால், அறிவியல் பூர்வமான உண்மைகளையும், அன்றைய நிலையில் நடைமுறையில் இருந்த சட்டங்களையும் அரசு மதிக்காமல் கால்வாயை அழிக்கிறது என்பதுதான் அதன் வாதம். எக்ஸ்னோராவின் வாதத்தை மூன்று கருத்துகளாகச் சுருக்கலாம்:

1. கால்வாயின் நடுவில் நிற்கும் மிகப் பெரும் தூண்கள் நீரின் போக்கைத் தடுப்பதாலும், கால்வாயின் அகலத்தை ரயில் நிலையங்கள் நிரந்தரமாகக் குறைப் பதாலும் வெள்ளம் உருவாகிறது.

2. நடைமுறையில் உள்ள சட்டங்களை, குறிப்பாக நீர் நிலைகளைப் பாதுகாக்கும் வருவாய் நிலை ஆணைகளை (Revenue Standing Orders - RSO), கடலோர பகுதிகள் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை (coastal zone regulations) அரசு மதித்து ஒழுங்காகச் செயல்படுத்தவில்லை.

3. இந்தத் திட்டம் பள்ளிக்கரணை ஏரிக்கு நீர் செல்லும் வழிகளை அடைத்து விடுவதால் சுற்றுச் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நீர்நிலையைப் பாதிக்கிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நீர் நிலைகளைப் பாதுகாக்கும் சூழல் பாதுகாப்பு சட்டங்களை அரசு முறையாகப் பின்பற்றவில்லை.

முடிவாக, இந்தச் சீரழிவை நிறுத்த வேண்டும் என்று நீதிபதிகளிடம் மன்றாடியது. நீதிபதிகள் ரயில்வே வேலைக்கு தடையேதும் விதிக்காமல் வழக்கை விசாரிக்கலாம் என்று மட்டும் முடிவு செய்தார்கள்.

இதற்கு ஆன காலம் பத்து ஆண்டுகள் !

இதற்கு எதிராக ரயில்வேயும் அரசுத் துறைகளும் கீழ்கண்ட பதில் வாதங்களை வைத்தன:

1. கால்வாயின் நடுவில் நிற்கும் பெரிய தூண்களும் கரையை குறுக்கிக் கட்டப்பட்ட ரயில் நிலையங்களும் வெள்ளத்தை உருவாக்கவில்லை. மாறாக, வெள்ளம் உருவாகக் காரணமாக இருப்பது, கரையோரம் இருக்கும் குடிசைகளே. அத்தகைய குடிசைகளை வெகு விரைவில் வெளியேற்ற இருப்பதனால், இனிமேல் வெள்ளம் வரும் சாத்தியம் இல்லை.

2. பறக்கும் ரயில் திட்டம் பொது மக்களின் நன்மை (Public interest) கருதிச் செயல்படுத்தப்பட இருப்பதால் நடைமுறையில் இருக்கும் வருவாய்த் துறை நிலை ஆணைகளை மதிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும் ரயில்வே சட்டம், ஆற்றிலோ கால்வாயிலோ எந்தவிதமான மாற்றங்களையும் செய்ய இடம் அளித்து இருப்பதால், கால்வாயில் அரசு செய்த மாற்றங்கள், கால்வாயின் அகலத்தைக் குறைத்தது, கரைகளைச் சிதைத்தது அனைத்தும் சட்டப்பூர்வமான செயல்களே.

3. சென்னையின் சுற்றுப்புறப்பகுதிகள் வெகு வேகமாக நகர்மயமாகி வருவதால், பள்ளிக்கரணை போன்ற சதுப்பு நிலங்களையும் அது சார்ந்த பிற ஏரிகளையும் காக்கும் சாத்தியம் எதுவும் இல்லை.

எக்ஸ்னோரா எடுத்து வைத்த வாதங்கள் அனைத்தும் மறுக்க முடியாத அறிவியல் மற்றும்



பக்கிங்காம் கால்வாயை அரசு ஆக்கிரமிப்பதற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்த நீதிபதி மணிக்குமார் (இடது) மற்றும் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சதாசிவம்.

சட்டபூர்வமான வாதங்கள். குறிப்பாக, கால்வாயின் அகலம் குறையும் போது நீர் மட்டம் உயரும், அப்படி உயரும் நீர்மட்டம் வெள்ளத்தை உருவாக்கும் என்பது அறிவியல் உண்மை. கூடவே, சுற்றுச் சூழலை, அதிலும் குறிப்பாக முக்கியத்துவமிக்க நீர்நிலைகளை பாதுகாக்கும் சர்வதேச கடப்பாடுகளில் இந்தியா கையெழுத்து இட்டிருப்பதாலும், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களை நடை முறைப்படுத்தும் பொறுப்பு இருப்பதாலும் பள்ளிக்கரணை ஏரியைக் காக்க வேண்டிய சட்டப்பூர்வமான கடமை மத்திய, மாநில அரசுகளுக்கு இருக்கிறது. அத்துடன், பெருகி வரும் சென்னை நகரத்தின் நீடித்த வளர்ச்சிக்கு அதன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிக அவசியம், பல நூற்றுக்கணக்கான ஏரிகள், குளங்களை, கால்வாய்களை நாம் பாதுகாக்காமல் சென்னை நகரின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்ய இயலாது என்பதையும் எக்ஸ்னோரா வலியுறுத்தியது,

அத்துடன், மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் நகரங்கள் வெள்ள அபாயத்திற்கு உள்ளாவது மிகப் பெரும் தவறு என்பதையும் சுட்டிக் காட்டியது. இந்த வழக்கு நடந்து கொண்டிருந்த காலத்தில் சர்வ தேச அளவில் அறிவியலாளர்கள், சட்ட அறிஞர்கள் இது போன்ற பொறுப்பற்ற செயல்களைக் கண்டித்துப் பல மாநாடுகளை நடத்திக் கொண்டிருந்தனர். நமது நாட்டின் சட்டங்களையே மதிக்காத அரசாங்கம் சர்வதேச சட்டங்கள், அறிவுரைகளை மட்டும் மதிக்குமா என்ன? எதையும் மதிக்காமல் ரயில்வே வேலைகள் வெகு வேகமாக நடந்து கொண்டே இருந்தன.

இப்படியாக, எந்தப் பயனும் இன்றிப் பத்தாண்டு கள் நடைபெற்ற வழக்கு ஒருவழியாக 2006-ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. நீதிபதிகள் தீர்ப்பு என்ற ஒன்றை வழங்கினார்கள். அந்தத் 'தீர்ப்பு' அரசு எதிர்பார்த்தபடியே இருந்தது. அரசு சொன்ன அனைத்து வாதங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எக்ஸ்னோரா எழுப்பியிருந்த எந்த அறிவியல் கேள்விக்கும் அங்கு விடையில்லை. இதற்கும் ஒருபடி மேலே சென்று நீதிமன்றம் சில வினோதமான காரணங்களைப் பட்டியலிட்டது. உதாரணமாக, பறக்கும் ரயில் திட்டம் தமிழ்நாட்டின் தொழில் வளத்தை வளர்க்க வந்த திட்டம் என்றும், இது போன்ற மேலதிகமான திட்டங்களை அரசு உருவாக்க வேண்டும் என்றும், அப்போதுதான் உலக அரங்கில் 'இந்தியா தலை நிமிர்ந்து நடக்கும்' என்றும்; சுற்றுச்சூழல்வாதிகள், தன்னார்வலர்கள் தேவையற்ற விவாதங்களை நடத்தி ஒன்றுமில்லாததைப் பெரிதாக்குகிறார்கள் என்றும் குறிப்பிட்டது.

தீர்ப்பின் பலனாக, கால்வாயின் அகலம் பாதிக்கும் குறைவாகி பத்து மீட்டருக்கு வந்தது; கரைகள் முழுமைக்கும் தூர்க்கப்பட்டு விட்டது. சென்னை மாநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA) வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் ("River and drainage system in CMDA") குறுக்கப்பட்ட பக்கிங்கம் கால்வாய் வெள்ளத்திற்கான ஒரு நிரந்தரக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளது. சென்னையின் குடிமக்கள் இனிவரும் காலம் முழுதும் இந்தத் தீர்ப்பின் பலனை அனுபவிக்க வேண்டும் என்பது அதன் உட்பொருள். பல ஆண்டுகள் பல்லாயிரம் மக்களின் உழைப்பில் உருவான பக்கிங்காம் கால்வாய்க்கு நிரந்தரச் சாவு இந்த தீர்ப்பினால் விதிக்கப்பட்டது. நீதிபதிகளின் மேதாவிலாசத்தைப் படிக்க விரும்புபவர்கள் தீர்ப்பின் 21-ஆவது பாராவை மட்டும் படிக்கவும்.

பக்கிங்காம் கால்வாயைச் சிதைக்கும் இறுதித் தீர்ப்பு வருவதற்கு முன்பே ரயில் திட்டத்தின் ஒரு பகுதி முழுமைபெற்று ஓடத் தொடங்கி விட்டது. குடிசைகள் அகற்றப்பட்டு குடிசைவாசி களை ஒக்கியம்-துரைப்பாக்கம் என்ற கிராமத்திற்கு அனுப்பி வைத்தாயிற்று. ஆனால், வெள்ளம் மட்டும் நின்ற பாடில்லை. தீர்ப்பு வந்த பிந்திய பத்து ஆண்டு களில் குறிப்பாக, நவம்பர்-டிசம்பர் 2015-இல் வந்த வெள்ளம் என்ன பேரிழப்பைச் செய்தது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அநேகமாக, இந்தத் தீர்ப்பு வழங்கிய கோமான்களின் வீடு களும்கூட வெள்ளத்தில் மூழ்கியிருக்கக் கூடும். ஒருவேளை, பக்கிங்காம் கால்வாயைச் சுருக்காமல் அப்படியே விட்டு வைத்து இருந்தால், இந்த ஆண்டின் வெள்ளம் இவ்வளவு கோரமாக இருந்திருக்காது. தற்போது கடந்து சென்ற நீரைவிடக் குறைந்தது மூன்று மடங்கு நீர் கால்வாயில் பாதுகாப்பாகச் சென்றிருக்கும்.

தீர்ப்பு வழங்கிய இந்த இருவரில் ஒருவர் பின்னாளில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலை வராகக் கோலோச்சிய சதாசிவம்; இன்னொருவர் மணிக்குமார்.

(தொடரும்)



துப்புரவுப் பணியாளர்கள்:

# சென்னையின் மீட்பர்கள்!

> “சாதி இந்துக்களுக்கு தூய்மையான, மரியாதைக்குரிய வேலைகளையும்; தீண்டத்தகாதோருக்கு அசுத்தமான, இழிந்த வேலைகளையும் ஒதுக்கிப் பிரித்துக் கொடுத்து, அதன் மூலம் சாதி இந்துக்களை மரியாதைக்குரியவர்களாகக் காட்டும், தீண்டத்தகாதோர் மீது மானக்கேட்டைத் திணிக்கும் உழைப்புப் பிரிவினையின் மீதுதான் இந்து சமூக ஒழுங்கு நிலைகொண்டுள்ளது.” – அம்பேத்கர்

**சென்னையில்** ஏற்பட்ட வெள்ளத்தின் போது ஹெலிகாப்டர்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் வீசப்படுவதைக் கண்ட எனது நண்பரொருவர் கொஞ்சம் ஆதங்கத்தோடு, “பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாகரிகமான முறையில் நிவாரண உதவிகளைச் செய்ய முடியாதா?” எனக் கேட்டார். அதே சென்னையின் ஒதுக்குப்புறமாக உள்ள செம்மஞ்சேரியில் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு உணவுப் பொட்டலங்களைக் குப்பை வண்டியில் எடுத்துக் கொண்டுபோய் கொடுத்தது என்ற செய்தியைப் படித்த பொழுது, எனக்கு முன்னது அநாகரிகமாகவும் படவில்லை, அதிர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை.

ஏரிகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை இடிக்க வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்த மறுநாளே, தாம்பரம் - வரதராஜபுரத்தில் அமைந்துள்ள பார்ப்பான் கால்வாயின் ஒருபகுதியை ஆக்கிரமித்து உருவாகியிருந்த அம்பேத்கர் புதுநகர் காலனியைச் சேர்ந்த 110 வீடுகளின் மீது புல்டோசரை ஏற்றி இடித்துத் தள்ளினார், அம்மாவட்ட ஆட்சியர். அதேசமயம், அதே பார்ப்பான் கால்வாயை ஆக்கிரமித்து பேஸ் என்ற கட்டுமான நிறுவனம் கட்டியிருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்பின் மீது அரசின் கடப்பாரைகூட இறங்கவில்லை.

செம்மஞ்சேரிக்கு சோத்துப் பொட்டலங்களை குப்பை வண்டியில் எடுத்துச் செல்லலாம் என்ற அகங்காரம் அரசிடம் இருந்ததற்குக் காரணம், அங்கு வசிக்கும் மக்களில் பெரும்பாலோர் தாழ்த்தப்பட்டோர். ஆக்கிரமிப்புகளை அகற்றும் அரசின் நடவடிக்கை அம்பேத்கர் புதுநகர் மீது பாய்ந்ததை, அந்தப் பெயரே காட்டிக் கொடுக்கிறது.

சாதி, மத, வர்க்க வேறுபாடுகளைக் கடந்த மனிதம் மக்களிடம் வெளிப்பட்டதை வெள்ள மீட்பு நடவடிக்கைகளின் போது காண முடிந்ததாகப் பத்திரிகைகளும், முகநூல்களும் சுட்டிக்காட்டி எழுதிக் கொண்டிருந்த வேளையில்தான், நிவாரண உதவி வழங்குவதில் சாதி பார்க்கும், வர்க்கம் பார்க்கும் புத்தி இருப்பதையும் மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் எடுத்துக் காட்டின. அப்படியான சம்பவங்கள் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக மட்டுமே நடந்ததாக, வீணாகப் பெரிது படுத்தப்படுவதாகக் கருத இடமேயில்லை.

கடலூர் மாவட்டத்தின் பல கிராமங்களில் நிவாரண உதவிகள் ஆதிக்க சாதியினர் வசிக்கும் தெருக்களைத் தாண்டி தாழ்த்தப்பட்டோர் குடியிருக்கும் பகுதிக்குள் செல்வது குதிரைக் கொம்பாக இருந்திருக்கிறது. அங்குள்ள ஒரு கிராமத்தில் இராணுவம் நடத்திய மருத்துவ முகாம்கூட தாழ்த்தப்பட்டோர் நுழைய அஞ்சும் ஆதிக்க சாதி தெருவில் நடந்ததாகக் குறிப்பிடுகிறது, பிரண்ட்லைன் இதழ்.

தாழ்த்தப்பட்டவர்கள், மீனவர்கள் உள்ளிட்ட அடித்தட்டு மக்கள் வாழும் வடசென்னையைச் சேர்ந்த செல்வி, மழைநீரும் சாக்கடையும் கலந்த கழிவில் நின்றபடியே, “கோபாலபுரமும், போயஸ் தோட்டமும் மட்டுமே சென்னையில்லை” என ஒரு போலீசுக்காரனின் முகத்துக்கு நேராக ஆத்திரத்தோடும் அழுகையோடும் கதற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, சென்னையில் வெள்ளம் வாரிக்கொண்டு வந்த குப்பைக் கழிவுகளை அள்ளும் சுகாதாரப் பணியில் ஆதிக்க சாதிப் புத்தி மிகவும் வெளிப்படையாகவும், அருவருக்கத்தக்க வகையிலும் வெளிப்பட்டது.

சென்னையைப் புரட்டிப்போட்ட வெள்ளம் ஏறத்தாழ 1 இலட்சம் டன் குப்பைகளையும்



எதிலும் சுத்தம் பார்க்கும் ஆதிக்கச் சாதியினரே,
இந்தத் துப்புரவுப் பணியை நீங்கள் செய்தால் உங்கள் பவுசு குறைந்துவிடுமா?

கழிவுகளையும் நகரெங்கும் வாரி இறைத்துவிட்டுச் சென்றிருப்பதாக அரசும், இந்தக் கழிவுகள் 3 இலட்சம் டன்களுக்கு மேலிருக்கும் எனத் தொண்டு நிறுவனங்களும் குறிப்பிடுகின்றன. நகரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மலை போன்று குவிந்திருந்த கழிவுகளை அகற்றும் இந்த இழிந்த வேலையைத் தாழ்த்தப்பட்ட அருந்ததியர்கள் மீது மட்டுமே சுமத்திவிட்டு தமிழக அரசும் சமூகமும் ஒதுங்கிக் கொண்டன.

வெள்ளத்தில் சிக்கிய பொதுமக்களைக் காப்பாற்றியதையும் அவர்களுக்கு உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்கியதையும் நிவாரணப் பணியாகக் கருதும் பொதுமக்களும், அரசும் அவற்றுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாத குப்பைகளை அகற்றுவதை, நோய்த் தொற்று ஏற்படாமல் நகரைச் சுத்தம் செய்வதை நிவாரணப் பணிகளுள் ஒன்றாகக் கருதவில்லை. மாறாக, அதனை ஆதிக்க சாதி மனோநிலையிலிருந்து தீண்டத்தகாத வேலையாகவே ஒதுக்கி வைத்தார்கள்.

அதனால்தான், வெள்ளம் புகுந்த தனது வீட்டை பிளீச்சிங் செய்து சுத்தப்படுத்துவதில் அக்கறை காட்டிய பொதுமக்கள், தாம் வசிக்கும் தெருவில் குவிந்து கிடக்கும் குப்பைகளையும் கழிவுகளையும் அகற்ற முன்வரவில்லை. வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட மக்களைக் காப்பாற்றவும், அவர்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்யவும் பம்பரமாக இயங்கிப் பாராட்டுகளை அள்ளிய தன்னார்வலர்கள், வெள்ளம் விட்டுப் போன குப்பைகளையும் கழிவுகளையும் சுத்தம் செய்வதில் அதேவிதமான அக்கறை காட்டாமல் ஒதுங்கிக் கொண்டார்கள். மோடி அரசு தூய்மை இந்தியா திட்டத்தை அறிவித்தவுடன், கையில் விளக்குமாற்றுடன் போட்டோவுக்கு போஸ் கொடுத்த நடிகர்களும், மேட்டுக்குடி கனவான்களும் இந்த இக்கட்டான தருணத்தில் எங்கோ ஓடிஒளிந்து கொண்டார்கள். இராணுவம், போலீசு, தேசியப் பேரிடர் மேலாண்மை நிறுவனம் உள்ளிட்ட அரசு அமைப்புகளை இந்தப் பணியில் ஈடுபடுத்த அரசே மறுக்கிறது. வீட்டுக்கு ஒரு ஆள் என்ற வகையில் திரட்டப்பட்டு செய்யப்பட வேண்டிய இந்தப் பணி, அதற்கு மாறாகத் தாழ்த்தப்பட்ட அருந்ததியினர் மீது சுமத்தப்பட்ட வலுக்கட்டாய உழைப்பாக மாறியது.

## மனிதர்களா, மந்தைகளா?

சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 11,700 துப்புரவு பணியாளர்கள், தமிழகத்தின் மற்ற மாநகராட்சிகளிலிருந்தும் பேரூராட்சிகளிலிருந்தும் அழைத்து வரப்பட்ட 8,000 பணியாளர்கள் மற்றும் ஆந்திராவிலிருந்து கொண்டு வரப்பட்ட 700 பணியாளர்கள் என மொத்தமாக 20,000-க்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்கள் சென்னையைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆதிக்க சாதி உள்ளிட்ட மற்றைய சாதியினரால் இழிந்த வேலையாக ஒதுக்கி வைக்கப்பட்ட இந்த வேலையில் தாம் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டிருப்பதை இந்தத் தொழிலாளர்கள் உணராமல் இல்லை. ஆனாலும், அதனைப் பெருந்தன்மையோடு சமூகத்தின் நன்மை கருதி செய்தார்கள், செய்து வருகிறார்கள்.

8 அடி உயரத்துக்கு வெள்ளம் புகுந்த ஈக்காட்டு தாங்கல் இராணுவ அதிகாரிகள் குடியிருப்பில் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட ஈரோட்டைச் சேர்ந்த மாரிமுத்து, "எனக்கு சர்க்கரை நோய் இருக்குதுங்க. வெயில்ல ரொம்ப நேரம் நின்னு வேலை செய்யறதுனால, வியர்த்துக் கொட்டி அப்பப்போ மயக்கம் வந்துடுதுங்க. பரவாயில்லங்க, ஆபத்து நேரத்துல உதவலைன்னா அப்புறம் இருந்தென்னங்கரிரி எனக் கூறுகிறார்.

வெள்ளம் வடிந்த பிறகு தேங்கி நின்ற நீராலும், குவிந்து கிடந்த குப்பையாலும் தொற்று வியாதி பரவக்கூடும் என்ற பெரும் அச்சத்தை சென்னை நகர மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வாந்தி, பேதி, காலரா, எலிக் காய்ச்சல், டெங்கு காய்ச்சல், இன்னும் நாக்கில் நுழைய முடியாத தொற்று நோய்களெல்லாம் குழந்தைகளை, சிறுவர்களை, முதியவர்களைத் தாக்கி காவு கொண்டுவிடுமோ என்ற பீதியில் சென்னை நகர மக்கள் அனைவரும் வர்க்க பேதமின்றி, சாதி பேதமின்றி உறைந்து போயிருந்தனர்.

எந்தக் குப்பை தொற்று நோய்களை உருவாக்கும் என சென்னை நகர மக்கள் அச்சங் கொண்டிருந்தார்களோ, எந்தக் குப்பைகளைப் பார்க்க சகிக்காமல், முகத்தையும் மூக்கையும்

அவர்கள் மூடிக்கொண்டார்களோ, அப்பேரபாயத்தை இந்த துப்புரவு பணியாளர்கள் தமது உயிரை, உடல் நலத்தைப் பணயம் வைத்து அப்புறப்படுத்தி, சென்னை நகர மக்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.



அடிப்படை பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் தரப்படாமல் துப்புரவுப் பணியாளர்கள் வேலை வாங்கப்பட்டதைக் கண்டித்து ஆதித் தமிழர் பேரவை சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த துப்புரவு பணியாளர்களுக்கு தாம் எப்படிபட்ட அபாயம் நிறைந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பது தெரிந்திருந்தது. ஆனால், வெளி மாவட்டங்களிலிருந்தும் ஆந்திராவிலிருந்தும் கொண்டுவரப்பட்ட ஊழியர்களுக்கு இந்த அபாயம் குறித்து எதுவும் தெரியாது. "நிவாரணப் பொருட்களைக் கொடுக்க வேண்டும்; சின்டெக்ஸ் குடிநீர் தொட்டிகளைக் கழுவ வேண்டும்; பிளீச்சிங் பவுடரைத் தெருக்களில் தூவ வேண்டும்" எனப் பொய் சொல்லி அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள்.

அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள் என எழுதுவதுகூட உண்மைக்குப் புறம்பானது. அவர்கள் ஓட்டி வரப்பட்டார்கள் என்பதே உண்மை. இவர்களுள் ஒருவர்கூட பேருந்தில் அழைத்து வரப்படவில்லை. மாறாக, குப்பை வண்டியில் அள்ளிப்போட்டு கொண்டு வரப்பட்டார்கள். கோத்தகிரியிலிருந்து சென்னைக்கு, 12 மணி நேரம் நின்றுகொண்டே, குப்பை நாற்றத்தைச் சகித்துக்கொண்டு வந்ததாகக் கூறுகிறார், ஒருவர். அதே குப்பை வண்டியில்தான் குப்பை அள்ள வேண்டிய பகுதிகளுக்குத் தினந்தோறும் ஓட்டிச் செல்லப்பட்டார்கள். அடிமாடுகள் கூட இப்படி குப்பை வண்டியில் ஓட்டிச் செல்லப்படுவதில்லை.

கட்சி மாநாடுகளுக்குத் தொண்டர்கள் பேருந்தில் அழைத்து வரப்படும்பொழுது, அரசு அதிகாரிகள் சொகுசு வாகனங்களில் வேலைக்கு அழைத்து வரப்படும்பொழுது, மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதற்காக பாதுகாப்பு உடைகள், கவசங்கள், இரும்பு வலைகள் பூட்டப்பட்ட நவீன வாகனங்களில் போலீசு அனுப்பி வைக்கப்படும்பொழுது, ஒரு பொதுச் சேவையை ஆற்ற பணிக்கப்பட்ட இத்தொழிலாளர்களை, மனிதர்கள் என்றே மதியாது குப்பை வண்டியில் ஓட்டி வந்திருப்பது மன்னிக்கவே முடியாத அநீதி!

### வன்கொடுமை குற்றவாளிகள்

மனித மலத்தை மனிதனைக் கொண்டு அள்ள வைப்பது வன்கொடுமை குற்றம் என வரையறுக்கிறது, சட்டம். வெள்ளம் வாரிக்கொண்டுவந்து சென்னை தெருக்களில் குவித்த குப்பைக் கூளங்களோ மனித மலத்தைவிட ஆபத்தானவையாக இருந்தன. மனித மலத்தைவிடக் கேடான இக்கழிவுகளை வெறுங்கைகளால் அள்ளும்படி அத்தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்தியதன் மூலம், துப்புரவு தொழிலாளர்களுக்கு 24 விதமான பாதுகாப்பு சாதனங்களை வழங்க வேண்டும் என்ற சட்டத்தைத் தானே கடாசி எறிந்ததோடு, வன்கொடுமை குற்றத்தையும் இழைத்திருக்கிறது, அரசு. இந்தக் கொடுமையைத் தட்டிக் கேட்காமல் வேடிக்கை பார்த்துச் சென்றதன் மூலம் சென்னை நகர மக்களும் அரசின் குற்றத்திற்குத் துணை போனார்கள்.

"சாக்கடைக் கழிவை கையில அள்ளி, தலையில் சுமந்துட்டுப் போய் லாரியில் கொட்டணும். துர்நாத்தம் தாங்கலைங்க. அப்படியே கையைக் கழுவிட்டு, மதியம் சோறு திங்கணும். எப்படி முடியும்? இதனால நான் ராத்திரி மட்டும்தான் சாப்பிடுறேன். தூக்கத்துலகூட நாத்தம்தான் தெரியுது. இப்படி ஒரு பொறப்பு பொறந்திருக்கவே கூடாதுங்க" என்கிறார், முருகன். (பெயர் மாற்றப்பட்டுள்ளது)

"குப்பைகளைக்கூட சுலபமா அள்ளிடுவேன். ஆனா, செத்து அழுகிக்கிடக்கும் நாய், பூனை, பெருச்சாளிகளை எல்லாம் வெறும் கையால எடுக்க முடியாது. அங்கேயே குப்பையில கிடக்குற துணிகளை எடுத்து, கையில கிளவுஸ் மாதிரி சுத்திக்கிட்டுத்தான் அதுங்களை எடுத்துப் போட்டேன்" என்கிறார், திருவண்ணாமலையைச் சேர்ந்த ஜெயக்குமார்.

ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை வாங்கப்பட்ட இத்தொழிலாளர்களுக்கு கையுறை, காலுறை உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மட்டுமல்ல, உணவு, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளும்கூட உருப்படியாக வழங்கப்படவில்லை. ஒரு பகுதிப் பணியாளர்கள்

தங்க வைக்கப்பட்டிருந்த கோடம்பாக்கம்-புலியூர் பள்ளியில் தண்ணீர் வசதி இல்லை. கழிவுகளைச் சுமந்துவிட்டு அந்தக் கசடுகளோடும் துர்நாற்றத்தோடும் திரும்புகின்றவர்களுக்கு குளிக்கக்கூட நீர் வழங்கப்படவில்லை. கை, கால்களை மட்டும் கழுவிவிட்டுத் தூங்கச் சென்றிருக்கிறார்கள். தண்ணீர் பற்றாக்குறை காரணமாகக் கழிப்பறையைப் பயன்படுத்த முடியாமல் திண்டாடி, காலைக் கடனைக் கழிக்க தெரியாத ஊரில் பொது கழிப்பறைகளைத் தேடி அலைந்திருக்கிறார்கள்.

மாதவரத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த திருவண்ணாமலையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு அம்மா உணவகத்திலிருந்து உணவு வழங்கப்பட்டிருக்கிறது. மீலசாப்பிட முடியாத தரத்தில் இருந்த உணவு என்ற அந்த வெந்த சோற்றைக் கீழே கொட்டிவிட்டு பலர் பட்டினியோடு வேலைக்குப் போனார்கள் சூரி என்கிறார், வேலு என்ற தொழிலாளி. புலியூர் பள்ளியில் தங்க வைக்கப்பட்டிருந்த தொழிலாளர்களுக்கு காலை உணவாக உப்புமாவும் பொங்கலும் தரப்பட்டிருக்கிறது. அதில் ரவையையும் அரிசியையும் தவிர வேறு ஒன்றும் அதில் இருந்தது கிடையாது. இரவு உணவை 10 மணிக்கு மேல்தான் தந்திருக்கிறார்கள். வேலை முடித்து வந்த அலுப்பில், பாதித் தூக்கத்தில் எழுந்து அந்த உணவைச் சாப்பிட பிடிக்காமல் பட்டினியோடு படுத்து உறங்கியிருக்கிறார்கள், அத்தொழிலாளர்கள்.

“எங்களுக்கு சோறுகூட வேணாம்; குளிக்கவும் கழிக்கவும் தண்ணி கொடுக்கச் சொல்லுங்க” எனப் பத்திரிகையாளர்களிடம் இவர்கள் பரிதாபகரமாகக் கதறியதை, அரசும் அதிகாரவர்க்கமும் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. மாறாக, இந்த நிலைமைகளை வெளியில் சொன்னால் சீட்டைக் கிழித்துவிடுவோம் என மிரட்டியிருக்கிறார்கள். “எங்களை விட்டுவிடுங்கள், சொந்த ஊருக்குத் திரும்பச் செல்கிறோம்” என மதுரையைச் சேர்ந்த தொழிலாளர்கள் சண்டை போட்டபொழுது, அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த மண்டபத்தைப் பூட்டிபோட்டு சிறை வைத்திருக்கிறார்கள்.

அத்தொழிலாளர்களைக் கொத்தடிமைகளைப் போல அரசு நடத்திய கொடூரம் சில பத்திரிகைகளின் வாயிலாக அம்பலமான பிறகு, இரவு உணவில்



சென்னை - பெருங்குடியில் அரசு உருவாக்கியிருக்கும் குப்பை மலை: நிரந்தர அபாயம்.

## இந்த அரசே வாரிப் போட வேண்டிய குப்பைதான்!

சென்னையில் ஒவ்வொரு நாளும் 4,500 டன் குப்பை சேகரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இப்படி சேகரிக்கப்படும் குப்பையை அரசு என்ன செய்கிறது தெரியுமா? அவற்றை அப்படியே வாரிக்கொண்டு போய் கொடுங்கையூரிலும், பெருங்குடியிலும் கொட்டி, அந்த இரண்டு பகுதிகளையும் மாபெரும் குப்பை மேடுகளாக்கி வைத்திருக்கிறது.

வெள்ளத்திற்குப் பிறகு சென்னை நகரிலிருந்து வாரி எடுக்கப்பட்ட 1 இலட்சம் டன்னுக்கும் மேலான குப்பை கழிவுகளையும் அங்கேயே கொண்டுபோய் குவித்துவிட்டு, சென்னை சுத்தமாகி விட்டது எனக் கூறுவது எத்தகையதொரு மோசடி!

குப்பைகளைத் தரம் பிரித்து, அவற்றை இயற்கை உரமாக மாற்றுவதற்கும், மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதற்கும் ஏற்றவாறு போதிய கட்டுமானமோ தொழில் நுட்பமோ இல்லாமல் சென்னை மாநகரமாக மாறி நிற்கிறது.

அறிவியல்ரீதியில் குப்பைகளை அகற்றவோ, கழிவு நீரை வெளியேற்றவோ, மழை நீரைப் பயன்படுத்திக் கொள்ளவோ திறனற்ற அரசு, சென்னைக்கு அருகிலுள்ள பொன்னேரியைப் பொலிவுறு நகரமாக (ஸ்மார்ட் சிட்டி) உருவாக்கப் போவதாகக் கூறி வருகிறது. கூரை ஏறி கோழி பிடிக்காதவன், வானம் ஏறி வைகுண்டம் போனானாம் என்ற கதையைத்தான் இந்த ஸ்மார்ட் சிட்டி சவடால்கள் நினைவுபடுத்துகின்றன.

ஐந்தாண்டுகளுக்கு அல்லது பத்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் வெள்ளத்தால் சென்னைக்கு ஆபத்து ஏற்படுகிறது. ஆனால், மலை போல் குவிக்கப்படும் குப்பையால் சென்னை நிரந்தர ஆபத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

முட்டையும் சில எலும்புத் துண்டுகளும் சேர்ந்தன. அத்தொழிலாளர்களை மருத்துவர்கள் பரிசோதிக்கும் நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

### எது இழிவானது?

சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த துப்புரவு பணியாளர்களின் வீடுகளும்கூட இந்த வெள்ளத் திற்குத் தப்பித்திருக்காது. இந்த வெள்ளத்தின்போது மற்றவர்கள் என்ன அபாயத்தைச் சந்தித்தார்களோ, அதே அபாயத்தை அவர்களது குடும்பத்தினரும் சந்தித் திருப்பார்கள். மற்றவர்களுக்கு என்ன இழப்புகள் ஏற்பட்டதோ, அதே போன்றதொரு இழப்புகள் அவர்களுக்கும் நேரிட்டிருக்கும். வாழ்க்கையை மீண்டும் ஆரம்பத்திலிருந்தே தொடங்க வேண்டிய நிலையில் மற்றவர்கள் நிற்பதைப் போலவே, அவர்களது நிலையும் உள்ளது. ஆனாலும், தங்களுக்கு நேர்ந்த இழப்புகள், துயரங்கள், வேதனைகள் அனைத்தையும் ஒதுக்கிவைத்துவிட்டு, பொது நன்மையைக் கருதி அவர்கள் வெள்ளத்தின்போதும், அது வடிந்த பிறகும் மக்களின் உயிரைக் காக்கும், நகரத்தின் தூய்மையைக் காக்கும் பணியில் ஈடுபட் டார்கள்.

வாந்தி, பேதி, காய்ச்சல், தோல் அரிப்பு, சேற்றுப் புண், கால் வீக்கம் எனப் பலவாறான தொற்று நோய்கள் இந்தப் பணியாளர்களைத் தாக்கிய போதும், அதற்கு முறையான மருத்துவ சிகிச்சை கிட்டாத போதும், அவர்கள் இந்தப் பணியைக் கைவிட்டுவிடவில்லை. நோய்கள் மட்டுமல்ல, நவம்பர் முதல் வாரத்தில் பெய்த பெருமழையின்போது துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுந்தரம், அடையாறு ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார். அவரது சடலம்கூட இதுவரை கிடைக்கவில்லை. அதனையடுத்து ஏற்பட்ட வெள்ளம் அடித்து வந்து குப்பைகளை வாரிப்போட்டு சுத்தம் செய்து கொண்டிருந்தபோதே சென்னையைச் சேர்ந்த காந்தராவும், ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த பழனிச் சாமியும் திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டு இறந்து போனார்கள்.

சென்னை நகர மக்கள் தாமே முன்வந்து செய்ய வேண்டிய இந்த துப்புரவு பணியிலிருந்து ஒதுங்கிக் கொண்டது மட்டுமல்ல, தமக்காக குப்பைக் கழிவுகளை அகற்றி, நகரைத் தூய்மைபடுத்திய இந்த தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களின் பெருந்தன்மையை, இன்னும் சொல்லப்போனால் தமது உயிரை, உடல் நலத்தைப் பணயம் வைத்து குப்பைகளை அகற்றிய அவர்களின் தியாகத்தை உணரவே மறுக்கிறார்கள்.

தம் கண் முன்னே, தமது தெருவில் சாக்கடையும் சேறும் சகதியும் நிறைந்த, சகிக்கமுடியாத துர்நாற்றம் வீசும் குப்பைகளை, கழிவுகளை வெறுங்கைகளால் அள்ளிப் போடும் அவர்கள் யார், எங்கிருந்து அவர்கள் அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் எங்கே, எப்படி தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள், கடுமையாக வேலை வாங்கப்படும் அவர்களுக்குப் போதிய உணவு வழங்கப்படுகிறதா, அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம்கூட சென்னை நகர மக்கள் கண்டு கொள்ளவேயில்லை.

'தீண்டத்தகாத' இத்துப்புரவு பணியாளர்கள் ஆற்றிய இத்தன்னலமற்ற சேவைக்கும் தியாகத் திற்கும் தமிழக அரசு காட்டிய பதில் மரியாதை என்ன தெரியுமா? அந்தத் தொழிலாளர்களுக்கு 5 கோடியை 56 இலட்ச ரூபாய் ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்டிப்பதாகப் பீற்றி வருகிறது. இந்தப் பணத்தில் துப்புரவுப் பணிகளை காண்டிராக்டு எடுத்துள்ள தனியார் நிறுவனங்களும் அதிகாரி வர்க்கமும் பறித்துக் கொண்டது எவ்வளவு என்பது ஒருபுறமிருக்க, ஒரு அளப்பரிய சேவையை காகிதப் பணத்தால் மதிப்பிடுவது எந்த வகையில் நியாயமானது என்ற கேள்விக்கு தமிழக அரசு மட்டுமல்ல, மனசாட்சியுள்ள ஒவ்வொருவரும் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

வேலை செய்தார்கள், அரசு கூலி கொடுத்திருக்கிறது என உங்கள் மனசாட்சி இதனை நியாயப்படுத்தினால், "இதே பணத்தை நாங்கள் தருகிறோம். நீங்கள் தெருவில் கொட்டிய குப்பைகளை நீங்களே வாரிப் போடத் தயாரா?" என ஆதித் தமிழர் பேரவையின் தலைவர் அதியமான் எழுப்பியுள்ள கேள்விக்கு நீங்கள் முகங்கொடுத்தேயாக வேண்டும்.

வட சென்னையில் வாழும் அடித்தட்டு மக்கள், தவ்ஹீத் ஜமாத் என்ற அமைப்பைச் சேர்ந்த முசுலீம் இளைஞர்களோடு கைகோர்த்துகொண்டு தங்கள் தெருக்களில் தேங்கியிருந்த குப்பைகளையும், கழிவு நீரையும் வாரிப் போட்டு சுத்தம் செய்தார்கள். விரல் விட்டு எண்ணத்தக்க தன்னார்வலர்களும், மக்கள் அதிகாரம் அமைப்பைச் சேர்ந்த தோழர்களும் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டார்கள். இவர்கள் யாரும் துப்புரவு பணியைத் தீண்டத்தகாததாகக் கருதவில்லை. அதேசமயம், மேற்கு மாம்பலத்தைச் சேர்ந்த மாமிகள், "தங்கள் அக்கிரகாரத்தில் குவிந்திருந்த குப்பைகளை அள்ளிப் போட தோட்டிகளை அனுப்புமாறு" சவுண்டு விட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களைத் தடுத்தது எது? துப்புரவுப் பணியை, தெருவில் இறங்கி நகரத்தைத் தூய்மை செய்யும் பணியைத் தீண்டத்தகாததாகக் கருதும் அவர்களின் சாதித் திமிரும், சனாதன தர்மமும்தான். இந்த முடைநாற்றம் பிடித்த சாதிக் குப்பையை ஆதிக்க சாதி எண்ணம் கொண்ட ஒவ்வொருவரும் தமது மனதில் இருந்தும், மூளையில் இருந்தும் வாரிப் போடாத வரை, துப்புரவுப் பணியாளர்களின் சேவையையும் தியாகத்தையும் அவர்களால் மதிப்பிட முடியாது; துப்புரவுப் பணியை அனைவருமே செய்யக்கூடிய தொழிலாக ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

● குப்பன்

# வரலாற்றுக் குற்றத்திலிருந்து அமெரிக்காவை விடுவித்த மோடி!

வெற்றி, வெற்றி என்று ஆரவாரித்தன முதலாளித் துவ ஊடகங்கள். இது, திருப்புமுனை மாநாடு என்று பூரித்தார், அமெரிக்க அதிபர் ஒபாமா. அழகான, அமைதிப் புரட்சி நடந்துள்ளதாக ஆர்ப்பரித்தார், பிரான்சின் அதிபர் ஹோலண்டே. பருவநிலைக்கான நீதி வென்றது என்று கூத்தாடினார் மோடி. வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி என்று பக்கமேளம் வாசித்தார், பா.ம.க.வின் அன்புமணி. இவர்களால் வெற்றியாகச் சித்தரிக்கப்படும் மாநாடு என்பது, புவி வெப்பமடைவதைத் தடுக்க பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் கடந்த நவம்பர் 30-ஆம் தேதி முதல் டிசம்பர் 12-ஆம் தேதி வரை பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் 195 நாடுகள் பங்கேற்ற "காப்-21" (COP - Conference of the Parties) என்றழைக்கப்படும் மாநாடாகும்.

1992-இல் ஐ.நா. மன்றத்தின் தட்பவெப்பநிலை மாற்றம் பற்றிய மாநாடு தொடங்கி, 1997-இல் ஜப்பானின் கியோட்டோ நகரில் நடந்த மாநாடு, 2009-இல் கோபன்ஹேகனில் நடந்த மாநாடு - என புவி வெப்ப நிலை அதிகரிப்பைத் தடுக்கவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் பலமுறை பல மாநாடு களும் பேச்சுவார்த்தைகளும் நடந்துள்ள போதிலும், 2012-க்குள் பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப் படுத்துவதாக 114 நாடுகள் கையொப்பமிட்டுள்ள போதிலும், இத்தகைய மாநாடுகளால் உருப்படியாக எந்த விளைவும் ஏற்படவில்லை. இந்நிலையில், புவி மேற்பரப்பின் சராசரி வெப்பநிலையானது 2100-க்குள் மேலும் 3.5 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அதிகரிக்கும் அபாயம் நிலவுவதால், பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் தற்போது பாரிஸ் நகரில் "காப்-21" என்றழைக்கப்படும் இன்னுமொரு மாநாடு நடந்து ள்ளது.

தொழிற்புரட்சி தொடங்கிய காலத்திலிருந்தே அதாவது, முதலாளித்துவ உற் பத்திமுறை தொடங்கிய காலத் திலிருந்தே ஆலை உற்பத் திக்காக கரியும் எண்ணெய்யும் எரிக்கப்பட்டு பசுமைக்குடில் வாயுக்கள் என்றழைக்கப்படும் கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, கந்தக டை ஆக்சைடு, குளோரோ ப்ளோரோ கார்பன் முதலான கரிம வாயுக்கள் பெருகத் தொடங்கி, புவியின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உலக அளவில் பசுமைக்குடில் நச்சுவாயுக்களை வெளியேற்றுவதில் அமெரிக்க வல்லரசுதான் முதலிடம் வகிக்கிறது. பிற ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளும் ரஷ்யாவும் அதற்கடுத்த நிலையில் உள்ளன. உலக மக்கள்தொகையில் 24 சதவீதத்தைக் கொண்ட தொழில் வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகளிலிருந்துதான் 75 சதவீத பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேறுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், புவியின் வெப்பநிலை அதிகரிப்புக்கும் பருவநிலை மாற்றங்களுக்கும் காரணமான பசுமைக்குடில் வாயுக்களைப் பெருமளவில் வெளியேற்றிப் பேரழிவை விளைவித்துக் கொண்டிருப்பவை ஏகாதிபத்திய நாடு கள்தான்.

ஆனால், புவியின் வெப்பநிலையைத் தொழிற் புரட்சி காலத்துக்கு முந்தைய வெப்பநிலையை விடக் கூடுதலாக 2 டிகிரி செல்சியஸ் வரை தற்போது அனுமதிப்பது; எனினும், இந்த உயர்வை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொள்வது; 2020 முதலாக ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இவற்றை மறு ஆய்வு செய்வது; வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகள் ஆண்டுக்கு 100 பில்லியன் டாலர் நிதியை, பருவநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கான நட வடிக்கைகளுக்காக ஏழை நாடுகளுக்குக் கொடுப்பது - என்பது உள்ளிட்ட பொத்தாம் பொதுவான தீர்மானங்களுடனும் வெற்று வாக்குறுதிகளுடனும் அவற்றை நிறைவேற்றுவதற்கான பொறுப்போ, கால இலக்கோ, கண்காணிப்போ இல்லாமல் இம்மாநாடு முடிவடைந்துள்ளது.




பருவநிலை மாற்றத்துக்குக் காரணமாக பசுமைக்குடில் வாயுக்களைத் தொழிற்புரட்சி காலத்திலிருந்தே வெளியேற்றி யதில் வளர்ச்சியடைந்த ஏகாதி பத்திய நாடுகளுக்கு வர லாற்று ரீதியாகவே கூடுதல் பொறுப்பு இருக்கிறது. இதன் காரணமாகத் தமது கடந்த காலச் செயல்பாடுகளுக்குப் பொறுப்பேற்று, புவி வெப்ப

மடைவதைத் தடுக்கவும் தள்ளிப் போடவும் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளுக்கு நிதியுதவியும் தொழில்நுட்ப உதவியும் செய்ய வேண்டுமென கியோட்டா மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இதனாலேயே இந்த ஒப்பந்தத்தை அமெரிக்க வல்லரசு ஏற்க மறுத்தது. இதர ஏகாதிபத்திய நாடுகளோ தொடர்ந்து இழுத்தடித்து வந்தன.



பேரழிவை விளைவிக்கும் பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைத் தடுக்கக் கோரியும், இதற்குக் காரணமான ஏகாதிபத்திய நாடுகளை எதிர்த்தும் சுற்றுச்சூழலாளர்களும் உழைக்கும் மக்களும் பாரிஸ் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி.

தரகுப் பெருமுதலாளிகளை ஆளும் வர்க்கமாகக் கொண்டுள்ள வளரும் நாடுகளுக்குப் பசுமைக்குடில் வாயுக்களைப் பெருமளவில் வெளியேற்றும் தொழில்களை தள்ளிவிட்டு, அவற்றை தமது உற்பத்தி பின்னிலமாக மாற்றிக் கொண்டுள்ள ஏகாதிபத்திய நாடுகள், இப்போது இந்நாடுகளுக்கும் பொறுப்பு உள்ளதாகக் குற்றம் சாட்டுகின்றன. இதன்படி, கியோட்டோ மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட "வரலாற்றுப் பொறுப்பு" என்ற வார்த்தை தற்போதைய பாரிஸ் மாநாட்டில் நீக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளான ஏகாதிபத்திய நாடுகளையும் பாதிக்கப்பட்ட உலக நாடுகளையும் சமமாக வைத்து கட்டுப்பாடுகள் பற்றி விவாதித்ததோடு, இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகளுக்கும் இந்த வரலாற்றுப் பொறுப்பு இருக்கிறது என்று கூறி, பருவநிலைச் சீர்குலைவு குற்றவாளிகளான ஏகாதிபத்தியவாதிகளால் ஏற்பட்டுள்ள பெருஞ்சுமையை வளரும் நாடுகளின் தோள்களில் தள்ளிவிடும் சதிதான் இம்மாநாட்டில் அரங்கேறியுள்ளது.

மேலும், ஒவ்வொரு நாட்டுக்கும் மாறுபட்ட பொறுப்புகள்உண்டு(Common But Differentiated Responsibilities - CBDR) என்கிற கருத்து திட்டமிட்டே இந்த ஒப்பந்தத்தில் திணிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் நோக்கத்தை எட்டும் வகையில் எல்லா நாடுகளின் அரசாங்கங்களும் தமக்குத்தாமே கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமாம்; அதாவது, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியங்கள் தாங்கள் வெளியேற்றும் பசுமைக்குடில் வாயுக்களுக்குத் தமக்குத்தாமே உச்சவரம்பு நிர்ணயித்துக் கொண்டு கட்டுப்படுத்திக் கொள்ளுமாம். இதை நடைமுறைப்படுத்த ஏகாதிபத்திய நாடுகளுக்கு எந்த நிர்பந்தமும், கட்டுப்பாடும், கால இலக்கும் இல்லாமல் ஒரு காகித ஒப்பந்தத்தை நிறைவேற்றி, எல்லோரும் சேர்ந்து கும்பலாக கோவிந்தா போட்டுக் கொண்டு, உலகைப் பேரழிவை நோக்கி இழுத்துச் செல்லும் அயோக்கியத்தனம்தான் இம்மாநாட்டில் அரங்கேறியுள்ளது.

2014-இல் பிரேசிலின் லிமா மாநாட்டில், "வளரும் நாடுகள், வளர்ச்சியடைந்த பணக்கார நாடுகள்" - என்று உலகை இரண்டு பிரிவாகக் காட்டியதற்கு மாறாக, "வளரும் நாடுகள், புதிதாக பொருளாதார ரீதியில் முன்னேறிவரும் நாடுகள், வளர்ச்சியடைந்த பணக்கார நாடுகள்" என்று பிரேசில் நாட்டின் பிரதிநிதிகள் உலகை மூன்றாகப் பிரித்து, ஒரு சமரசத் திட்டத்தை முன்வைத்தனர். இந்தியா, சீனா, பிரேசில் போன்ற புதிதாகப் பொருளாதார ரீதியில் முன்னேறிவருவதாகக் கூறப்படும் நாடுகளுக்கும் இந்த வரலாற்றுப் பொறுப்பு உள்ளதாகச் சொல்லி, இந்நாடுகளும் தாமாகவே கட்டுப்பாடு விதித்துக் கொள்ளக் கோருவது என்பதுதான் இதன் சாரம்.

ஏகாதிபத்தியங்களின் கைக்கூலியாகச் செயல்படும்வேலையை "பிரிக்" (BRIC) கூட்டமைப்பிலுள்ள பிரேசிலும் இந்தியாவும் திறமையாகச் செய்தன. இதனால் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இந்தியா, சீனா, பிரேசில், தென்னாப்பிரிக்கா போன்ற புதிதாகப் பொருளாதார ரீதியில் முன்னேறிவருவதாகக் கூறப்படும் நாடுகளுக்குமிடையே வேறுபாடு இல்லாமல் செய்யப்பட்டது. குறிப்பாக, புவி வெப்பமடைவதன் காரணமாக கடல் மட்டம் உயர்ந்து பேரழிவுக்கும் மூழ்கிப் போகும் அபாயத்திலும் உள்ள பசிபிக் பெருங்கடலிலுள்ள சிறிய தீவு நாடுகளின் தலைவர்கள் பணத்தாலும் பரிசுகளாலும் வாயடைக்கப்பட்டு, இப்பேரபாயம் பற்றி விவாதிக்கப்படாமல் முடக்கப்பட்டது.

முன்னர் நடந்த மாநாடுகளில் ஏழை நாடுகளோடு இணைந்து ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் பெயரளவில் ஒரு அணியாக நின்ற இந்தியா, இப்போது அப்பட்டமாக ஏகாதிபத்தியக் கைக்கூலித்தனத்துடன் சரணாகதி அடைந்து கிடக்கிறது. மரணித்துவிட்ட இந்திய இறையாண்மைக்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பு சவடால்களுக்கும் திவசம் கொடுக்கும் புரோகிதர் வேலையை மோடி அரசு வேகமாகச் செய்து கொண்டிருக்கிறது.

• தனபால்

# ஏழைகளுக்குத் தீவிரவாதி வேடம்! பொய் மோதல் கொலைக்கு வீரசக்கர விருது!! இராணுவத்தின் முகத்திரை கிழிகிறது!

**அகதிகளையும் ஏழைகளையும் ஏலமெடுத்துச் சுட்டுக்கொன்று, தீவிரவாதி என்று கணக்கு காட்டி விருது வாங்குகின்றனர் இராணுவ அதிகாரிகள் என்று ஆதாரங்களுடன் குற்றம் சாட்டுகிறது, "என் கைகளில் இரத்தம்" என்ற நூல்.**

"என் கைகளில் இரத்தம்" - "போலி மோதல் கொலைகள் குறித்த வாக்கு மூலங்கள்" (Blood on My Hands: Confessions of Staged Encounters, Kishalay Bhattacharjee, Harper Collins India) என்றொரு நூல் சமீபத்தில் வெளிவந்திருக்கிறது. பிரிவினைவாத, தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் இந்திய இராணுவம் நடத்தி வரும் கற்பனைக்கும் எட்டாத ஒரு கொடூரத்தை அம்பலமாக்கியிருக்கிறார் இந்நூலின் ஆசிரியர் கிஷாலய் பட்டாசார்ஜி.

கிஷாலய் பட்டாசார்ஜி கவுகாத்தியில் பிறந்தவர். கடந்த 15 ஆண்டுகளாக வட கிழக்கிந்திய மாநிலங்களிலும், சட்டிஸ்கர்-ஜார்கண்ட் முதலான இடங்களிலும் இந்திய அரசு நடத்தி வரும் 'தீவிரவாத எதிர்ப்பு போர்' குறித்த களச் செய்திகளைத் திரட்டி வந்த என்.டி.டி.வி.யின் மூத்த பத்திரிகையாளர். அஸ்ஸாமிலும் மணிப்பூரிலும் பணியாற்றியவரும், இப்போதும் பணியில் இருப்பவருமான ஒரு இந்திய இராணுவ கர்னல், (தனது பெயரை வெளியிடக்கூடாது என்ற நிபந்தனையுடன்) அளித்த பேட்டியை அடிப்படையாகக் கொண்டு விரிகிறது இந்நூல்.

காஷ்மீரிலும் வடகிழக்கிந்திய மாநிலங்களிலும் இந்திய இராணுவ சிப்பாய்கள் பிரிவினைவாதிகளுக்கு எதிராக உயிரைப் பணயம் வைத்துப் போராடி வருவதாக அரசும், ஊடகங்களும், சினிமாக்களும் பிரச்சாரம் செய்து வருவதை நாம் அறிவோம். இம்மாநிலங்களில் நடைபெறும் இராணுவ அத்துமீறல்கள், தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் போக்கில் தவிர்க்கவியலாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக நேர்ந்து விடும் தவறுகள் என்றே பலரும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் (AFSPA) என்பன போன்ற சட்டங்களை அகற்றி விட்டால், குற்றமிழைக்கும் இராணுவத்தினரைச் சட்ட பூர்வமாகத் தண்டிக்க இயலும் என்றும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.




இந்திய இராணுவம் குறித்த பிரமைகள் அனைத்தையும் இந்த நூல் தகர்த்துச் சுக்கு நூறாக்குகின்றது. ஒரு கூலிப்படையைக் காட்டிலும் கொடூரமான, இழிந்த, நம்பத்தகாத, அபாயகரமான சக்தியே இந்திய இராணுவம் எனக் காட்டுகின்றன இந்த நூல் கூறும் விவரங்கள்.

இராணுவத்தினர் நடத்தும் கொலைகளை இந்நூலாசிரியர், "மோதல், போலி மோதல், பொய் மோதல்" என்று மூன்று விதமாக வகைப்படுத்துகிறார். மோதல் கொலை என்பது உண்மையான துப்பாக்கிச் சண்டையில் நிகழும் கொலை. போலி மோதல் என்பது நிராயுதபாணியாக கைது செய்யப்பட்ட 'தீவிரவாதிகளை' நிற்கவைத்துச் சுட்டுக் கொலை செய்வது. பொய் மோதல் என்பது அப்பாவி மக்களைப் பிடித்துக் கொண்டு வந்து சுட்டுக் கொன்றுவிட்டு, கொல்லப்பட்டவர்கள் தீவிரவாதிகள் என்று கணக்கு காட்டுவது.

இராணுவத்தால் கொலை செய்யப்படுவோரில் ஆகப்பெரும்பான்மையினர் இத்தகைய "பொய் மோதலில்" கொலை செய்யப்படும் ஒரு பாவமும் அறியாத மக்கள்தான் என்று கூறுகிறது இந்நூல்.

வடகிழக்கிந்திய மாநிலங்களும் காஷ்மீரும் ஏறத்தாழ 60 ஆண்டுகளாக இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில்தான் இருந்து வருகின்றன. பிரிவினைவாத அபாயத்தை முறியடிப்பதற்காகத்தான் இராணுவம் அங்கே நிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறுகிறது இந்திய அரசு. இந்தக் கூற்றை நிரூபிக்கும் பொருட்டு இராணுவத்தால் கொலை செய்யப்படும் தீவிரவாதிகளின் கணக்கும் ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. இவ்வாறு கொல்லப்படும் தீவிரவாதிகள் எனப்படுவோர் யார்?

இந்தியாவுடன் மிக நீண்ட எல்லையைக் கொண்டிருக்கும் வங்கதேசத்திலிருந்து வறுமையின் கொடுமை தாளாமல், பிழைப்பு தேடி இந்தியாவுக்கு வருகிறார்கள் வங்கதேச ஏழைமக்கள். இராணுவத்தின் ஆசியுடன் இந்திய எல்லையில் செயல்படும் மஃபியாக் குழுக்கள், சட்ட விரோதமாக இந்திய எல்லைக்குள்நுழைகின்ற இம்மக்களைமிருகங்களை வலை வீசிப் பிடிப்பதைப் போல மடக்கிப் பிடிக்கின்றன. அன்று கறுப்பின அடிமைகள் ஏலம் விடப்பட்டதைப் போல, இந்த ஏழைகளும் ஏலம் விடப்படுகிறார்கள்.

இவர்களை ஏலம் எடுப்பவர்கள் இந்திய இராணுவ அதிகாரிகள் மட்டும்தான் என்கிறார் நூலாசிரியர். அன்று ஏலத்தில் எடுத்த கறுப்பின அடிமைகளின் உழைப்பை வெள்ளை முதலாளிகள் கசக்கிப் பிழிந்தார்கள். இந்திய இராணுவ அதிகாரிகளோ, இந்த ஏழைகளுக்குச் சீருடை அணிவித்து சுட்டுக் கொன்றுவிட்டு, தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகக் கணக்கு காட்டுகிறார்கள். இது விதிவிலக்கான நிகழ்வல்ல, தீவிரவாதிகள் என்ற பெயரில் கொல்லப்படுபவர்களில் 70% பேர் இவர்கள்தான் எனக் கூறுகிறார் நூலாசிரியருக்குப் பேட்டி அளித்திருக்கும் அந்த இராணுவ அதிகாரி.

"சுட்டுக் கொல்லப்படுபவர்களின் கைகளைக் கூட நாங்கள் கட்டுவதில்லை. அவர்கள் யாரும் எதிர்ப்பு தெரிவித்தும் நான் பார்த்ததில்லை. எதிர்த்துப் பயனில்லை என்று அவர்களுக்குத் தெரியும். தங்கள் விதி முடிந்தது என்று கொல்லப்படுவதற்கு முன்பே அவர்களுக்குத் தெரியும்" என்று அப்பாவிகள் கொல்லப்படும் காட்சியை விவரிக்கிறார் அந்த இராணுவ அதிகாரி. இவ்வாறு சுடப்பட்டு மலை முகட்டிலிருந்து உருட்டி விடப்பட்ட பின்னரும், தற்செயலாக உயிர் பிழைத்து தப்பி வந்த ஆனந்த கலிதா என்பவரின் வாக்குமூலத்தையும் இந்த நூல் பதிவு செய்திருக்கிறது.

ஏன் இந்த இரக்கமற்ற கொடூரக் கொலைகள்? ஒரு இராணுவ அதிகாரி பதவி உயர்வு பெற வேண்டுமென்றாலோ, வீரசக்கரவிருது பெறவேண்டுமென்றாலோ, அல்லது ஐ.நா. அமைதிப்படைக்கு அனுப்பப்பட்டு வெளிநாடுகளுக்கு இன்பச் சுற்றுலா போகவேண்டுமென்றாலோ அவருடைய படைப் பிரிவு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான 'எதிரிகளை', அதாவது தீவிரவாதிகளைக் கொன்றிருக்க வேண்டும், சிறை பிடித்திருக்க வேண்டும் அல்லது சரணடைய வைத்திருக்க வேண்டும்.

மாவோயிஸ்டுகள் என்ற பெயரில் நூற்றுக் கணக்கான பழங்குடி மக்களைச் சரணடையச் செய்து சிறைவைத்த மத்திய துணை இராணுவப் படையின் மோசடியைப் பற்றி சில மாதங்களுக்கு முன் புதிய ஜனநாயகத்தில் எழுதியிருந்தோம். கைது,




சரணடைவு போன்ற நாடகங்களை அரங்கேற்றினால், தப்பித்தவறி அம்பலமாகக்கூடும் என்ற காரணத்தினால், சிக்கவே வாய்ப்பில்லாத பாதுகாப்பான வழி 'பொய் மோதல் கொலை'தான் என்பதால், இதனைத் தெரிவு செய்திருக்கிறார்கள் இராணுவ அதிகாரிகள். ஆடு, மாடுகள் கொல்லப்பட்டால்கூட முறையிடுவதற்கு உரிமையாளர்கள் வரக்கூடும். இவர்கள் சட்ட விரோதமாக வருகின்ற அகதிகள் என்பதால், உண்மை தெரிந்தாலும், இது பற்றி யாரும் யாரிடமும் புகார் செய்யக்கூட முடியாது.

வங்கதேச ஏழைகள் மட்டுமல்ல, தீவிரவாதம் தொடர்பான வழக்குகளில் கைது செய்யப்பட்டு, பின்னர் சிறையிலிருந்து விடுவிக்கப்படும் கைதிகளையும் சிறை வாசலிலிருந்தே கடத்தி இராணுவத்திடம் விற்பனை செய்வதற்கு, தனி மஃபியாக்கள் இயங்குகின்றன. தமது பிள்ளை சிறையில் இருப்பதாக குடும்பத்தினர் எண்ணிக்கொண்டிருக்க, அவர்கள் இராணுவத்திடம் விற்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பார்கள். தானே இவ்வாறு சில கைதிகளை ஏலம் எடுத்துக் கொலை செய்திருப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார், நூலாசிரியருக்குப் பேட்டியளித்த இராணுவ அதிகாரி.

இதற்கெல்லாம் தேவைப்படும் பணம் எப்படிக் கிடைக்கிறது?

இராணுவத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் வழங்கப்படும் உளவுத்துறை நிதி என்பது தணிக்கைக்கு உட்படுத்தப்படாத ரகசிய நிதி. இதனைப் பயன்படுத்தியும், போதை மருந்துக் கடத்தல், மரம் கடத்தல், ஆள் கடத்தல் போன்றவற்றில் ஈடுபடும் மஃபியாக்களிடமிருந்து வசூலிக்கும் மாமூலைப் பயன்படுத்தியும்தான் வங்கதேச ஏழைகளை விலைக்கு வாங்குகிறார்கள் இந்திய இராணுவ அதிகாரிகள்.

காஷ்மீரில் இது எப்படி நடைபெறுகிறது என்பதையும் விளக்குகிறது இந்த நூல். உத்திரப்பிரதேசம் மற்றும் பிகாரிலிருந்து வேலை தேடி ஜம்மு செல்லும் ஏழை முஸ்லிம்களை மஃபியாக்கள் கடத்துகின்றனர். அவர்களை இந்திய இராணுவ அதிகாரிகள் விலக்கு வாங்கி, பாகிஸ்தான் எல்லைக்கு கொண்டு செல்கிறார்கள். பிறகு, பாகிஸ்தான் உளவுத்துறையிடமிருந்து பாக். இராணுவத்துப்பாக்கிகளைக் கள்ளத்தனமாக விலைக்கு வாங்குகிறார்கள் (ஊழலில் பாகிஸ்தான் இராணுவம் இந்திய இராணுவத்தை விஞ்சியது என்பதால், இவர்களுக்கிடையில் தொழில்ரீதியில் நெருக்கமான உறவு இருக்கிறது). துப்பாக்கிகள் கிடைத்தவுடனே, அந்த அப்பாவிகள் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். உடலுக்கருகில் பாக். இராணுவத் துப்பாக்கியை வைத்து எடுத்த புகைப்படம் வெளியிடப்படுகிறது. திருட்டுத்தனமாகக் கொள்முதல் செய்யப்பட்ட இந்த துப்பாக்கிகள், எல்லை தாண்டிய பயங்கரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளாக கணக்கு காட்டப் படுகின்றன.

"நான் காஷ்மீரில் இராணுவ அதிகாரியாகப் பணியாற்றியிருக்கிறேன். அஸ்ஸாமைவிட அங்கே தான் நிலைமை மிக மோசம். அரசியல் தலைமையில் தொடங்கி போலீசு, இராணுவம் வரை அனைவருமே அங்கே கூட்டுக் களவாணிகளாகச் செயல்படுகிறார்கள். சரி, தவறுகளைப் பற்றி கேட்பதற்கே நாதியில்லை என்ற அளவுக்கு அரசு என்பதே அங்கே இல்லாமல் போய்விட்டது. இராணுவம் நீண்டகாலமாக அங்கே இருந்து வருவதால், காஷ்மீரிலிருந்து வெளியேற அது விரும்பவில்லை. ஒரு நிறுவனம் என்ற முறையில் தனது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளவே இராணுவம் விரும்புகிறது" என்று இந்த நூலை அறிமுகப்படுத்தி எழுதியிருக்கும் கட்டுரையில் குறிப்பிடுகிறார், முன்னாள் இராணுவ அதிகாரி சுஷாந்த் சிங். *(இந்தியன் எக்ஸ்பிரஸ், அக். 17, 2015)*

அதாவது, எல்லை தாண்டிய பயங்கரவாதம் இல்லையென்றால், காஷ்மீரில் இராணுவத்துக்கு வேலை இல்லை. எனவே, காஷ்மீரில் இராணுவம் தொடர்ந்து இருக்க வேண்டுமானால், இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வும் விருதுகளும் கிடைக்க வேண்டுமானால், அங்கே தீவிரவாதம் தொடரவேண்டும். அதாவது தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக கணக்கு காட்டப்பட வேண்டும். மோதல் பொருளாதாரத்தின் விதி (Conflict Economy) என்று இதைக் குறிப்பிடுகிறார் சுஷாந்த் சிங்.

இந்திய ஆளும் வர்க்கங்கள், காஷ்மீரிலும் வடகிழக்கிந்திய மாநிலங்களிலும் சட்டிஸ்கரிலும் இராணுவ, துணை இராணுவப் படைகளைக் குவித்து, மக்களுக்கு எதிராக உள்நாட்டுப் போர் ஒன்றைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தெளிவான அரசியல் காரணங்கள் இருக்கின்றன. மாநில போலீசு படைகள் ஊழல் நிறைந்தவை, திறமையற்றவை, நம்பத்தகாதவை என்ற காரணங்களைச் சொல்லித் தான், தீவிரவாதிகளை ஒழிப்பதற்கு கட்டுப்பாடான, திறமையான, தேசபக்தியுள்ள இராணுவ, துணை இராணுவப் படைகளைக் களமிறக்கியிருப்பதாகக் கூறுகிறது அரசு.

ஆனால், அந்த இராணுவம் இரக்கமற்ற கொலைப்படையாக இருப்பது மட்டுமல்ல, கீழிருந்து மேல் வரை ஊழலிலும் மோசடியிலும் புழுத்துப் போயிருப்பதையும் இந்த நூல் கூறுகிறது. தமக்கு விதிக்கப்பட்ட கடமையை ஆற்றத் தவறுவது மட்டுமின்றி, அதற்கு நேர் எதிரான திசையில்தான் இராணுவம் செயல்படுகிறது என்ற உண்மையை இந்த நூல் அம்பலமாக்குகிறது.

பொய் வழக்குப் போட்டு அப்பாவிகளைச் சிறை வைத்து விட்டு, குற்றத்தைத் தடுத்துவிட்டதாகக் கூறுகிறது போலீசு. பொய் மோதல் கொலைகளில் அப்பாவிகளைக் கொன்று விட்டு, தீவிரவாதிகளைக் கொன்றதாக கணக்கு காட்டுகிறது இராணுவம். மோதலில் கொல்லப்பட்ட போடோ தீவிரவாதி என்று இராணுவம் கூறிய ஒரு நபர், உண்மையில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரர் என்று பின்னர் கண்டுபிடித்ததாகக் கூறுகிறார், நூலாசிரியர்.

பத்திரிகையாளரான இந்நூலின் ஆசிரியர், தான் திரட்டிய விவரங்கள் உண்மைதானா என்று உறுதி செய்து கொள்வதற்காக, மாநில அரசுகளின் தலைமைச் செயலர்கள், உள்துறைச் செயலர்கள், இராணுவ ஜெனரல்கள், போலீசு அதிகாரிகள் போன்ற பலரிடம் பேசியிருக்கிறார். யாரும் இந்த உண்மைகளை மறுக்கவில்லை. ஆனால், இவற்றை வெளியிடுவது, இந்திய இராணுவத்தை இழிவு செய்வதாக அமையும் என்று மட்டும் எச்சரித்திருக்கிறார்கள். தான் தேசத்துரோகி என்று தூற்றப்படுவோமோ என்ற அச்சத்தால் நூலை எழுதுவது குறித்தே பெரிதும் தயங்கியதாகக் கூறுகிறார் நூலாசிரியர். செப்டம்பர் 2015-இல் வெளிவந்துள்ள இந்த நூல் குறித்து அரசும் இராணுவமும் மூச்சு விடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"ஒரு ஜனநாயக அரசின் அதிகாரிகள், தமது சொந்த ஆதாயத்துக்காக ஆள்கடத்தல், சித்திரவதை, கொலை போன்ற குற்றங்களை இஷ்டம் போலச் செய்கிறார்கள் என்ற எதார்த்தத்தை என்னால் எதிர்கொள்ள முடியவில்லை, கொடூரமாக இருக்கிறது" என்று தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார் கிஷாலே பட்டாசார்ஜி. இந்தக் கொடூரமான எதார்த்தத்தைத்தான் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் எதிர்கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

• **சூரியன்**

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

7-ஆம் பக்கத் தொடர்ச்சி...

ரயில்வே உள்ளிட்ட 16 மண்டலங்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டிருக்கிறது. நிலுவையில் உள்ள இந்த வழக்கு ஐ.சி.எஃப். போன்ற நாட்டின் உள்ள 6 உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குப் பொருந்தாது" எனக் கூறும் அவர், இதற்கு ஆதாரமாக மற்ற 5 தொழிற்சாலைகள் 1998-க்குப் பிறகும் ஆக்ட் அப்ரண்டிஸ் மாணவர்களைப் பணிக்கு எடுத்துக் கொண்டதை ஆதாரமாகக் காட்டுகிறார்.

ஐ.சி.எஃப்.-இல் ஏறத்தாழ 7,000 பணியிடங்கள் காலியாக இருக்கும் நிலையிலும் ஆக்ட் அப்ரண்டிஸ் பயிற்சி முடித்து 17 வருடங்களாகக் காத்திருப்பவர்களை அக்காலியிடங்களில் நியமனம் செய்வதை அடாவடித்தனமாக மறுத்து வருகிறது, ஐ.சி.எஃப். நிர்வாகம். தற்சமயத்தில் இருக்கும் ஐ.சி.எஃப்.-இன் பொது மேலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அனைவரும் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுவதாகவும்; ரயில்வே துறையில் புதிய வேலைவாய்ப்புகள் உள்ளிட்டு பல்வேறு வகைகளில் வடமாநிலத்தவருக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் தமிழர்கள் என்பதாலேயே தாம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாகவும் 'குற்றம்' சுமத்துகின்றனர், ஆக்ட் அப்ரண்டிஸ் மாணவர்கள்.

இவர்களின் குற்றச்சாட்டில் உண்மை இருப்பதை மறுத்துவிட முடியாது என்றாலும், தமிழகத்தைச் சேர்ந்த ஒருவரைப் பொதுமேலாளராக நியமனம் செய்துவிட்டால் முடிந்துவிடுகிற பிரச்சினை அல்ல இது. இப்பிரச்சினையின் ஆணிவேரை மைய அரசின் தொழிலாளர் கொள்கையில்தான் நாம் தேட வேண்டும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஐ.சி.எஃப்.-இல் ஆண்டொன்றுக்கு 1000 ரயில் பெட்டிகள் தயாரித்த போது, அங்கு 16,000 தொழிலாளர்கள் பணியாற்றினர். 1700 ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் இன்றைக்கு 10,000 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்துபோனதற்கு ரயில் பெட்டி தயாரிப்பில் முன்னேறிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது காரணமல்ல. அரசு வேலைகளை அவுட் சோர்சிங் மூலம் தனியாரிடம் ஒப்படைத்துவிடும் கொள்கைதான் ஆட்குறைப்புக்கு அடிகோலியாக இருக்கிறது. "இந்த அவுட் சோர்சிங் முறை, இரயில்பெட்டி உற்பத்தி தொழிற்சாலை என்பதிலிருந்து வெளியிலிருந்து வரும் பொருட்களை அசெம்பிள் செய்யும் கூடமாக



ஆக்ட் அப்ரண்டிஸ் பயிற்சியை முடித்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கக் கோரி அம்மாணவர்களின் குடும்பத்தினர் ஐ.சி.எஃப். முன்பு நடத்திய போராட்டம். (கோப்பு படம்)

ஐ.சி.எஃப்.-ஐ மாற்றியிருக்கிறது" என்கிறார், ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கத்தைச் சேர்ந்த வெங்கடேஸ்வரன்.

அவுட் சோர்சிங் மற்றும் ஒப்பந்த தொழிலாளர் முறை - இந்த இரண்டும்தான் இப்பொழுது ஆட்குறைப்புக்கும், நிரந்தர வேலைவாய்ப்புகளை ஒழிப்பதற்கும், மோடி அரசும், கார்ப்பரேட் நிறுவனங்களும் தமது கைகளில் வைத்திருக்கும் தீய ஆயுதம். இந்த இரண்டும் படித்து தொழிற்பயிற்சிகளை முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு மட்டும் எதிரானதல்ல; நிரந்தரப் பணியில் இருக்கிறோம் என்ற மிதப்பில் இருக்கும் தொழிலாளர்களின், ஊழியர்களின் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாகவும் இருக்கிறது. "ரயில்வேயில் அடுத்த 4 ஆண்டுகளில் ஓய்வு பெறவுள்ள 2.25 லட்சம் தொழிலாளர்களுக்கு மாற்றாக புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது" என விவேக் தேவ்ராய் தலைமையிலான ரயில்வே சீரமைப்பு ஆலோசனைக் குழு பரிந்துரைத்திருப்பதை இங்கே நினைவுபடுத்திக் கொண்டால், எத்தகைய அபாயத்தைத் தொழிலாளி வர்க்கம் எதிர்கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

வேலைக்காகக் காத்திருக்கும் 5,000 பேருக்கும், ஒவ்வொரு ஆண்டும் தொழில் பயிற்சி முடித்து வெளியேறுபவர்களுக்கும் வேலைவாய்ப்பை உத்தரவாதப்படுத்த வேண்டுமென்றால், அவுட்சோர்சிங் உள்ளிட்ட தொழிலாளர் விரோதக் கொள்கைகளைத் தாக்கி அழிக்க வேண்டும். இதற்கு நிரந்தரத் தொழிலாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள், தொழில் பழகுநர்கள் என்ற பாகுபாடு இன்றி, அனைத்துத் தொழிலாளர்களின் நலனையும் ஒருசேர பிரதிபலிக்கக்கூடிய ஐக்கியப்பட்ட தொழிற்சங்கத்தைக் கட்டியமைப்பதுதான் முதல் படியாக இருக்க முடியும். இது, போராட முடியாத ஒருவருக்கு வழி சொல்வதல்ல. தொழிலாளி வர்க்கம் தமது வேலைவாய்ப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்ள இந்தக் கடினமான வழியைத் தவிர, வேறு எளிதான மார்க்கம் எதுவுமில்லை என்பதுதான் உண்மை.

• கதிர்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.



## ஊருக்கு ஊரு சாராயம்!
## கதறுது தமிழகம்!

## திருச்சியில்

பிப்ரவரி 14, 2016

ஞாயிறு
மாலை 4.00 மணி

# மூடு டாஸ்மாக்கை!
# சிறப்பு மாநாடு

மற்றும் **கலை நிகழ்ச்சிகள்**

*போதையிலிருந்து தமிழகத்தை மீட்க,*
*சாராய சாம்ராஜ்யத்துக்கு முடிவுகட்ட வாரீர்!*

# மக்கள் அதிகாரம்

தமிழ்நாடு

தொடர்புக்கு: நெ. 5/9, எஃப்.எம். பிளாசா, 3-வது மாடி, பேக்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 001, கைபேசி : 99623 66321